www.tamilarangam.net

NLFT

# அரசியல் அறிக்கை

தமிழீழ தேசிய விடுதலை முன்னணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியல் அறிக்கை

தமிழீழ தேசிய விடுதலை முன்னணி

NATIONAL LIBERATION FRONT OF TAMIL EELAM

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் 1-வது தேசிய மாநாடு பல்வேறு நெருக்கடிகளுக்கும் சிக்கல்களுக்கும் மத்தியில் 1983-ம் ஆண்டு செப்டம்பர் 3ம், 4ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. எமது கடந்த மூன்றாண்டு நடைமுறை வேலைகளின் அனுபவத்தொகுப்பாகவே இவ்வறிக்கையை பொதுமக்களின் முன் சமர்ப்பிக்கிறோம். இவ்வறிக்கையானது 1983 செப்டம்பர் நடைபெற்ற எமது மகாநாட்டில் வாசிக்கப்பட்டு பின் அமைப்பின் சகல மட்டங்களிற்கும் கொண்டு செல்லப்பட்டு தோழர்களது ஆலோசனைகள் பெறப்பட்டு திருத்தியெழுதப்பட்டது. நாம் போராட்டத்தில் முன்னோடிகளாக இருக்கும் அதே வேளை பொதுமக்களிடமிருந்து கற்றுக்கொள்ள தயாராயுள்ளோம். இதிலுள்ளகுறைநிறைகளை சுட்டிக்காட்டுவதன் மூலமே பொதுமக்களாகிய நீங்கள் எமது வளர்ச்சிக்கு உதவுவதோடு எம்மில் ஒருவராக தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் உங்கள் பங்களிப்பை செலுத்த முடியும்.

—மத்திய குழு

தமிழீழ தேசிய விடுதலை முன்னணி

(NLFT)

# அரசியல் அறிக்கை

## முன்னுரை

இலங்கைவாழ் தமிழ் பேசும்மக்கள் தம்வரலாற்றின் ஒரு முக்கியமான திருப்புமுனையான கட்டத்தில் இன்று வந்து நிற்கிறார்கள். சிங்கள பேரினவாத யூ. என். பி அரசின் கீழ் தமது ஜீவமரணப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள், தம்மீதான ஒடுக்கு முறைக்கெதிராக போராடுகின்ற வரலாற்று போக்கினால் உந்தித் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தவிர்க்க முடியாது எதிர்த்துப் போராட நிர்ப்பந்திக்கப் பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள் தமது போராட்டத்தை சரியான திசை வழியில் முன்னெடுக்க தமக்கென ஒரு சரியான அமைப்பை உருவாக்கிக் கொள்வதும், அந்த அமைப்பின் கீழ் அணிதிரள்வதுமே இன்றைய காலக் கட்டத்தில் மிகவும் அவசரமானதும் அவசியமானதுமான விசயமாகும்.

தமிழ் பேசும் மக்கள் என்று நாம் சொல்லும் போது இலங்கை வாழ் சகல தமிழ் பேசும் மக்களையுமே குறிப்பிடுகின்றோம். வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள், ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் மலையக மக்கள் ஆகிய அனைவரும் இதில் அடங்குவர். இம் மூன்று பிரிவினர்க்குமான பிரச்னைகளின் தன்மைகளில் சிற்சில வேறுபாடுகள் காணப்படினும் யாவரும் சிங்கள பேரினவாதஒடுக்குமுறையின் பாதிப்புக்குஉட்பட்டவர்களே. இவர்களனைவரும் இனவாத அரசுக்கெதிராக போராடுவது தவிர்க்க முடியாததாகியுள்ளது. இவர்களில் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக வளர்ச்சி பெற்றுள்ளனர். தமிழ் தேசிய இனமானது கடந்த பத்தாண்டு காலத்திற்கும் மேலாக தனது இறைமைக்காக

www.tamilarangam.net

போராடி வருகின்றது. தமிழ் மக்களின் போராட்டமானது வெறும் மொழி உரிமைக்கான போராட்டமாக அல்லாது பரிபூரண விடுதலைக்கான போராட்டமாக இன்று வளர்ச்சி யடைந்துள்ளது.

எனவே தான் தமிழ் மக்கள் பாராளுமன்ற சந்தர்ப்ப வாத சமரசக் 'கூட்டணியின்' அரசியற் தலைமையை நிராகரித்து உண்மையான விடுதலை இயக்கத்தின் கீழ் தம்மை அணிதிரட்டிக் கொள்வது அவசியமானது என்பதை உணர்ந்துள்ளனர். இந்த நிலையில் தமிழ் மக்களின் சுயநிர்ண உரிமைக்கான போராட்டத்தை, அதாவது தனியாகப் பிரிந்து தமிழீழ மக்கள் குடியரசொன்றை அமைப்பதற்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியது எமது பிரதான பணியாகின்றது. தமிழீழப் பகுதியில் வாழும் சகல ஒடுக்கப் படும் தேசியப் பிரிவினரையும் உள்ளடக்கிய ஒரு பலமான முன்னணி ஒன்றினால் தான் இத்தகைய போராட்டத்தை வெற்றிகரமாக இறுதிவரை நடத்திச் செல்ல முடியும். அத்தகைய ஒரு அதி முக்கியமான பணியில் ஈடுபடுத்திக் கொள்ள நாம் எம்மை தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் ஒரு விடுதலை இயக்க மாகப் பிரகடனப் படுத்துகிறோம்.

எமது அரசியல் கொள்கைகளையும், போராட்டப்பாதை யையும் மக்கள் முன் வைப்பதன் மூலம் எமது போராட் டத்தை வெற்றிகரமாக வென்றெடுக்க, எம்மோடு அணி சேருமாறு அழைப்பு கூவுகிறோம். தமிழீழ விடுதலைப் போராட் டத்தை வெற்றிகரமாகவென்றெடுக்க, எம்மோடு அணிசேரு மாறு அறை கூவுகிறோம். தமிழீழ விடுதலைப் போராட் டத்தை மனப்பூர்வமாகவிரும்பி அதற்கு தமது பங்களிப்பை வழங்க தயாராகஉள்ள சகலரையும், அவர்கள், நாம் இங்கு குறிப்பிடும், அமைக்க விரும்பும் தமிழீழ மக்கள் குடியரசை அமைப்பதற்கான வேலைத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில்,' எம்முடன் இணைத்துக் கொள்ள தயாராக உள்ளோம்.



தமிழீழ தேசியத்தின் விடுதலையை வென்றெடுப்பதற் காக போராடும் அதே நேரத்தில் நாம் சகல தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகவும் சகல வழிகளிலும் போராடுவோம். மலையக, முஸ்லிம் மக்களின் தனித்துவ மான பிரச்னைகளை கணக்கிலெடாது அவர்களெல்லோ ரையும் ஒன்றாக பலவந்தமாக தமது மன விருப்பிற்கேற்ப ஒன்றாக ஒரு தேசிய இனமென்று முத்திரை குத்துவதை நாம் அங்கீகரிக்கவில்லை. அவர்களின் தனித்துவங்களை மதித்து, அவர்களின் தனியான போராட்டங்களில் நாம் எப்போதும் எம்மாலான பங்களிப்பைச் செலுத்தத் தயாராக உள்ளோம்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை வெற்றி கரமாக முடித்தெடுக்க ஒரு சரியான அரசியல் சித்தாந்த வழிகாட்டலுடன் அமைந்த வழிமுறையை வகுத்துக் கொள்வது ஒரு பிரதான பணியாகும். சரியான வழிமுறை களை வகுத்துக் கொள்ள எப்போதும், விஞ்ஞான பூர்வமான சமூகக் கண்ணோட்டத்திலேயே பிரச்னைகளை ஆராயக் கற்றுக்கொள்ளவேண்டும், பொதுவாக தமிழ்பேசும்மக்களின் வரலாற்று சமூக, பொருளாதார பிரச்சினைகளைப் பற்றிய சரியான ஆய்வுகளும் கணிப்பீடுகளும் செய்யப்படும்போதே எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை சரியாக வகுத்துக் கொள்ள முடியும். எமது இந்த அறிக்கையில் அதனை நாம் விரிவாக செய்யாவிடினும் சுருக்கமாக அதன் அடிப்படைகளை ஆராய முயன்றுள்ளோம்.

நாம் கடந்த மூன்றாண்டு காலமாக, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்காக செயல்பட்டு வந்துள் ளோம். எமது கடந்த கால அனுபவங்களின் தொகுப்பு எமது எதிர்கால நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியாக அமையும் என நம்புகிறோம். எமது கடந்தகால வெற்றிகள், தோல்விகள், முன்னேற்றங்கள், பின்னடைவுகள், சரிவுகள், பிழைகள் எல்லாவற்றையும் சரியாக ஆய்வுசெய்வது எம்மை திருத்திக்கொள்ள உதவும். கடந்த மூன்றாண்டுகால



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் வாழ்வில் எம்மை ஒரு உறுதியானதும், போர்க்குணமுள்ளதுமான ஒரு விடுதலை இயக்கமாக காட்டிக் கொள்ள முடியவில்லையெனினும் நாம் எமது தவறுகளை அறிந்து கொள்ளவும் அவற்றை திருத்திக் கொள்ளவும் தயாராக இருப்பதனால் நிச்சயமாக எம்மால் ஒரு உறுதியான போர்க்குணமுள்ள இயக்கமாக வளரமுடியும் என நம்புகிறோம்.

மக்கள் மத்தியில் வேரூன்றி அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளவும், அவர்கள் அநுபவங்களில் இருந்து எம்மை வளர்த்துக் கொள்ளவும் மக்களே, — மக்கள் மட்டுமே வரலாற்றை உருவாக்கும் இயக்கு சக்திகள் என்பதை உயர்த்திப் பிடிக்கவும் தயாராக இருப்பதால் எம்மால் நிச்சயமாக இதைச் சாதிக்க முடியும். மக்களே எமது அடிப்படை. அவர்களின் வெல்ல முடியாத சக்தியென்ற இரும்புக் கோட்டையின் மீதுள்ள அசைக்க முடியாத எமது நம்பிக்கையே எமது விடுதலைப் போராட்ட இயக்கத்தின் அஸ்திவாரமாகும்.

பரந்துபட்ட மக்கள் சக்தியை அணிதிரட்டுவதும், மக்கள் போராட்டமொன்றையே முன்னின்று நடாத்துவதற்கான பணிகள் வெற்றி பெறுவதும் மிகவும் சிரமமானதும் பல சோதனைகளுக்கும் தியாகங்களுக்கும் மத்தியிலேயே சாதிக்கப்பட வேண்டியதென்பதும் நாம் அறிந்தது தான். ஆனால் அதுவே அதுமட்டுமே எமது தேசிய விடுதலைக்கான ஒரேயொரு நிச்சயமான முறையென்பதால் எந்த விதமான சோர்வுகளுக்கும் இடம் கொடாது, சலிப்புகளுக்கு இடம் கொடாது, தியாகங்களிற்கு அஞ்சாது அந்த மகத்தான இலட்சியப்பாதையை நடத்தியே தீருவோம் என நாம் உறுதியாக கூறுகிறோம்.



## 1. இன்றைய அரசியல் நிலையும் தமிழ் மக்களின் பிரச்சனையும்

சர்வதேச ரீதியில் இன்று ஒடுக்கப்படும் மக்கள் தமது விடுதலைக்காக போராடி வருகின்றனர். நாளுக்கு நாள் புதுப்புதுப் போராட்டங்களும் புதிய முன்னேற்றங்களும் ஏற்பட்ட வண்ணம் உலக பிற்போக்கு ஒடுக்குமுறையாளர்கட்கு மக்கள் பதிலடி கொடுத்து தாக்கியும், அவர்களை தூக்கி வீசிவிட்டு தமது சுபமான, சுபீட்சமான வாழ்க்கையை ஸ்தாபித்துக் கொள்வதற்கான விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். உலக அரங்கில் மரண பயங்கொண்டுவிட்ட உலக பிற்போக்கு ஒடுக்குமுறையாளர்கள் புதிய புதிய வடிவங்களில் ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டுக் கொண்டு வருகிறார்கள். ஆனால் வரலாறு பின்னோக்கி ஓடுவதில்லை என்பதால் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்கள் நாளுக்குநாள் முன்னேறிய வண்ணம் இருக்கின்றன. எல்சல்வடோர், நிக்கராகுவா, தென்னாபிரிக்கா என்று நீளும் பல தேசங்களின் பட்டியல்கள் மக்களது போராட்டங்களின் நாளாந்த வெற்றிகளின் நிகழ்கால வரலாற்றுக்கான சான்றுகளாக விளங்குகின்றன.

இன்று தேசங்கள் (தேசிய இனங்கள்) உலக ஏகாதிபத்தியங்களாலும், அவற்றின் வால்பிடி அரசுகளாலும் ஒடுக்கப்படும் நிகழ்ச்சியைப் போலவே ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டங்களும் சர்வதேச அரங்கில் நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், இலங்கை வாழ்தமிழ் பேசும் மக்களது போராட்டமும் அவற்றின் ஒரு வடிவமே என்பதை யாரும் மறுக்க முடியாது. சகல ஒடுக்கப்படும் மக்களும் உலக அரங்கில் தத்தமது சுய விடுதலைக்காக போராடி வருகின்ற போராளிகளினதும் சாராம்சம் ஒன்றேதான். எல்லா நாடுகளிலுமுள்ள முதலாளித்துவ தரகு அரசுகள் தமது தவிர்க்க முடியாத சர்வதேசிய பொருளாதார நெருக்கடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யின் மத்தியில் தம்மை தற்காத்துக் கொள்ள நடாத்தும் இறுதி நடவடிக்கைகளான இந்த ஒடுக்கு முறைகளுக்கு எதிரான தன்மையே அந்தசாரம்சமாகும்.

இலங்கைவாழ் தமிழ்மக்களின் போராட்டத்தை பொறுத்தவரையில் அடிப்படையில் அவர்கள் தனியாகப் பிரிந்துபோதலை ஏற்றுக்கொண்டுள்ள போதிலும் தமது பிரச்சனைகள் பற்றியதும் அவற்றின் சாராம்சமான தன்மை பற்றியதுமான பிரக்ஞை பூர்வமான அறிவு மக்களிடம் சமமற்ற நிலையிலேயே காணப்படுகின்றது. ஒடுக்கப்படும் சகல தேசியப் பிரிவினரையும் உள்ளடக்கிய ஒரு மக்கள் போராட்டமொன்றை முன்னெடுப்பதன் மூலம் சிங்கள பேரினவாத அரசின் ஒடுக்குமுறையில் இருந்து அவர்களை விடுவிக்கின்ற எமது வேலைத்திட்டத்திற்கு இத்தகைய சமமற்ற உணர்வு ஒரு ஆரோக்கியமான நிலமையை தரமுடியாது. எனவே இன்றைய தமிழ் மக்களின் நிலை பற்றியதும் யூ. என். பி அரசு பற்றியதுமான சரியான கணிப்பீடே. எம்மை எமது போராட்டத்தை நெறிப்படுத்தும் தகுதியுடையவர்களாக மாற்ற முடியும்.

இலங்கையில் இன்றுள்ள யூ. என். பி அரசானது இலங்கையின் முன்னைய அரசுகள் எல்லாவற்றையும் விட வலுவானதும் ஆபத்தானதுமாகும். 1977ம் ஆண்டு அது தேர்தலுக்கு நின்றபோது பழைய யூ. என், பியின்கட்டுப்பெட்டித்தனமான பிற்போக்கு கொள்கைகளை தூக்கி எறிந்துவிட்டு பிற்போக்குதனமான புதியகொள்கைகளை வகுத்துக் கொண்டது. பழைய யூ. என். பியின் பிரபுத்துவபெருந்தோட்ட முதலாளிகளின் நலன் பேணும் (பிரிட்டிஷ் சார்பு) கொள்கைகளால் பல்தேசிய கம்பனிகளின் நலன்பேணும் (அமெரிக்க சார்பு) இன்றைய வகை சுரண்டல்களையோ நடைமுறைப் படுத்த முடியாமையே இந்த 'புதிய கொள்கை'களின் தோற்றத்திற்கு காரணமாகும்.

இப்புதிய கொள்கைகள் நேரடியாக அன்னிய முதலாளிகளதும் அரசுகளினுடையதுமான புதிய சந்தையாக



இலங்கையை மாற்றி அமைத்தது. அன்னிய முதலீட்டுக்கு இலங்கையை களமாக்கிக் கொடுத்தது. நேரடியாக உலக நாடுகளிலும் உலக வங்கிகளிலும் தங்கி வாழுகின்ற நிலமையை இலங்கைக்கு ஏற்படுத்தியது. சுருக்கமாக சொன்னால் இலங்கை அரசானது பிறநாட்டு உற்பத்தியாளர்களின் தரகனாக தன்னை மாற்றிக்கொண்டது. இதனால் அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் ஜெர்மனியிலும் தோன்றும் நெருக்கடிகளுக்கு இலங்கை மக்கள், பலியாக வேண்டிய நிலையை ஏற்படுத்தியது, இலங்கையின் தேசிய ரீதியிலான உற்பத்திகள் பாழடைந்தன. இலங்கையில் மீண்டுமொரு நவீனபாணிக் காலனித்துவமுறைச் சுரண்டல் ஆரம்பமாயிற்று. இத்தகைய நோக்கங்களையெல்லாம் தேன்பூசிய நஞ்சுகளாக இப்புதிய கொள்கைகள் கொண்டிருந்தன.

வரலாறு காணாத வெற்றியைப் பெற்றதாக கூறப்படும் இப் புதிய கொள்கைகளின் வெற்றிக்குப் பின்னால் உண்மையில் பல்தேசிய கூட்டுக் கம்பெனிகள் (Multe Internationals) பணத்தை தண்ணீராக செலவழித்ததை யாரும் மறுக்க முடியாது. சொல்லப்போனால் இக் கம்பெனிகளின் நலன் பேணும் புதியகொள்கைகள் வெற்றிபெற்றன என்பதுதான் உண்மை.

வெற்றியின் பின்னரும் ஜே. ஆர் சும்மா இருக்கவில்லை. இதற்கு முன்பிருந்த தலைவர்களைப் போலல்லாது ஜே. ஆர் நல்ல அனுபவசாலியும், அயோக்கிய தனம் கொண்ட திறமைசாலியும் ஏகாதிபத்திய விசுவாசியுமாவான், இதனை உணர்ந்தே இக்கம்பெனிகள் இவனையும், இவனது கட்சியையும் பயன்படுத்தின. தேர்தலின் பின்னர் தமது புதிய கொள்கைகளை அமுல்படுத்த இங்கிருந்த பிரிட்டிஸாரின் பாணியிலமைந்த பாராளுமன்றமுறை தடையாக இருக்கவே இதை சர்வாதிகார அரசு நிர்வாகமாக மாற்றி அமைத்தான். தன்னை ஜனாதிபதியாக பிரகடனப்படுத்திக் கொண்டான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லா நாடுகளிலும் பாசிச அரசுகள், பாராளுமன்ற நிர்வாக முறையை தூக்கி எறிந்துவிட்டு ஜனாதிபதி சர்வாதிகார அரசை நிறுவுவதன் மூலமே தோன்றியிருக்கின்றன. ஆனால் இலங்கையிலோ, வெகு தந்திரமாக ஜே. ஆர். பாராளுமன்றத்தையும் அதன் அதிகாரத்தையும் பயன்படுத்தியே அவற்றை அதிகார மற்றதாக ஆக்கினான். தனது பாசிச அரசின் வேசத்தை ஜனநாயக வேடத்துடன் அமைதியாக நிறைவேற்றி முடித்தான். தன்னை ஒரு சர்வாதிகாரியாக நிறுவிக்கொண்டே தன்னை ஒரு ஜனநாயகவாதி என்ற பிரமையை மக்கள் முன்னால் ஏற்படுத்திக் கொண்டான். அந்த விதத்தில் இவன் தனது முன்னைய பாசிச மூதாதையர்கட்கும் வழிகாட்டியாக அமைந்தான்! போலி ஜனநாயக வேடமிட்டபடியே, பாராளுமன்ற அங்கத்தவர்கள் சுதந்திரத்தையும் பறித்தான். கட்சி விலகலை தடை செய்து எதிர்கட்சி நடவடிக்கைகளை மட்டுப் படுத்தி அவற்றை சிதைத்து அழிக்கத் தொடங்கினான்.

எதிர்க் கட்சிகளை சின்னாபின்னப்படுத்தியது மிகவும் எளிதாக தன்னை ஸ்தாபித்துக் கொள்ள ஜே. ஆருக்கு வசதியளித்தது. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளைப் பறித்தபோது இதற்கு எதிரான எந்தவிதமான போராட்டங்களும் எழும்பாத விதத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உடைக்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற சந்தர்ப்பவாத சேற்றில் மூழ்கியிருந்த போலி இடதுசாரி கட்சிகளோ, எதிர்க்கும் திராணியற்று இருந்தன. பாராளுமன்ற அதிகாரப் பறிப்புக்கு எதிராகவோ பாசிச ஆட்சியின் தோற்றத்துக்கு எதிராகவோ ஏன் சிறிமாவோவின் குடியியல் உரிமைப் பறிப்புக்கு எதிராகவோ எந்தவொரு எதிர்க் கட்சிகளாலும் வெறும் கண்டனங்களை தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

இந்த யூ. என். பி அரசு சிங்கள மக்களது அடிப்படை உரிமைகளையும் பறித்தெடுத்தது. தொழிற்சங்க உரிமைகள் பறிக்கப்பட்டன. 1980 ஆகஸ்ட் மாத பொது வேலை நிறுத்-



தத்தின் போது அதில் குதித்த 40,000 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தது. தொழிற் சங்க மாயைக்குள் உழலும் இடது சாரிகளோ தொழிலாளர் மிரட்டப்பட்ட போதோ அவர்களது வேலைகள் பாதிக்கப்பட்டபோதோ எதுவும் செய்ய திராணியற்று போயிருந்தனர். 1971 கிளர்ச்சியாளர்களை விடுதலை செய்து தன்னை தார்மீகவாதியாக காட்டிக் கொண்ட ஜே ஆர் அரசு இந்த 40,000 தொழிலாளர்களை வீதியில் நிறுத்தியதன் மூலம் தனது சுய ரூபத்தை வெளிக் காட்டிய போதும் எவராலும் எதுவும் செய்யமுடியவில்லை.

அதிகாரம் கைக்கு வந்ததும் ஜே.ஆர். தன்னையொரு தார்மீகவாதியாகக் காட்டிக் கொண்டான். பாசிச வெறியர்கள் இவ்வாறுதான் தங்களை ஜனநாயகத்தின் காவலர்களாகவும் தார்மீக வாதிகளாகவும் காட்டிக் கொண்டே கொடூர அடக்குமுறைக்கு அஸ்திவாரமிடுவார்கள். பாசிசம் ஒவ்வொரு நாடுகளிலும் அந்த நாடுகளின் சமூக கலாச்சார பண்பாட்டு நிலமைகளுக்கேற்பவே தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்றது. இலங்கையில் ஜே.ஆர். தன்னை தார்மீக வாதியாகக் கூறிக் கொண்டே பௌத்தமத பெருமைகள் பற்றி பிதற்றிக் கொண்டே தமிழினம் மீதான அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டான். ஹிட்லர் கூட ஜெர்மனியில் ஆரிய இனத்தின் காவலனாக தன்னைக் காட்டிக் கொண்டே தனது பாசிச ஆட்சியை ஸ்தாபித்துக் கொண்டான். யூத இனத்துக்கு எதிரான ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டான். இலங்கையில் ஜே. ஆர். பௌத்தமதத்தையும், சிங்கள இனத்தையும் உய்விக்க வந்த காவலனாகத் தன்னைக் காட்டிக் கொண்டே தமிழ் மக்கள் மீது இன ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துவிடத் தொடங்கினான். தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பறிக்கத் தொடங்கினான்.

பழைய யு.என்.பி. அரசுகள் தொடர்ந்து நடாத்தி வந்த திட்டமிட்ட குடியேற்றங்களை ஜே.ஆர். மிகவும் விரைவாக நடைமுறைப்படுத்துகின்றான். இந்த அரசின் காட்டுமிராண்டித்தனமான சகல இன ஒடுக்கு முறைகளிலும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிகவும் அபாயகரமானது இந்த நிலப்பறிப்பே. இந்த நில அபகரிப்பானது தமிழ் மக்களை அவர்களின் பாரம்பரிய பிரதேசங்களிலேயே சிறு பான்மையினமாக்கி தேசியத் தன்மையை சிதைத்தழிக்கும் நோக்கம் கொண்டது. இந்த அரசினால் திருகோணமலையில் இராணுவப்பலம் கொண்டு திட்டமிட்ட குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு தமிழ் மக்களின் நிலங்கள் பறிக்கப்படுகின்றன. ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் இரண்டு தொகுதிகள் [அம்பாறை, சேருவாவிலை] பறிபோயுள்ளன மேலும் மேலும் நிலங்களை பறிக்கும் நோக்குடன் இக் குடியேற்றங்களை வசதி செய்து கொடுத்து தமிழ் மக்களின் வாழ்வுக்கு அச்சுறுத்தலாக இந்த அரசு இயங்கி வருகிறது. சேருவாவில, திரியாய் புனித நகர் திட்டங்கள் இலங்கை அரசின் பிரதேசப் பறிப்பு உதாரணங்களாகும்.

புனித நகர் அமைக்க எவ்வளவோ சிங்களப் பகுதி நிலங்கள் இருக்க தமிழனின் நிலங்களை பிடுங்கியுள்ள இவ்வரசு இதற்கெதிராக தமிழ் மக்கள் போராடுவதை சிங்களவர்க்கும் அவர்களது மதத்திற்கும் எதிரான போராட்டமாக திசை திருப்பிக் காட்டி இன வாதத்தை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டது. திருகோணமலையில் பிறிமா ஆலையை நிறுவும் நோக்கில் அங்கு சிங்களவரை குடியேற்றியது. மன்னாரில் கொண்டாச்சி மற்றும் பகுதிகளில் அரசமுந்திரி கூட்டுத் தாபனத்தில் முந்திரித் தோட்டங்களை உருவாக்குதல் என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துகின்றன. மன்னார், முல்லைத் தீவு, கொக்குளாய், புன்னைக்குடா, நாயாறு மற்றும் கரையோரப்பகுதிகளில் மீனவர்குடியேற்றங்களை உருவாக்கி தமிழர்களின் கடல் வளத்தையும் அபகரித்து வருகிறது. இதன் மூலம் சிங்கள மக்களிற்கும் தமிழ் மக்களிற்கும் இடையே பகையை வளர்க்கிறது.

சிங்களக் குடியேற்றங்களை இராணுவ பலத்துடன் நடாத்துவது மட்டுமல்லாது, தமிழரின் குடியேற்றங்களை தடுப்பதையும் அது கடைபிடித்து வருகிறது. 1977 இல்



காந்தீயம் போன்ற சமூக சேவை இயக்கங்களின் உதவியுடனும், தனியார் உதவியோ அன்றி சுயமாகவோ வந்து குடியேறிய மலையக மக்களை அச்சுறுத்தியும் அப்பாவிகளான இவர்களது குடிசைகளை இராணுவத்தை அனுப்பி தீக்கிரையாக்கியும் வருகின்றது. குடியேற்றம் மூலம் நிலப்பறிப்பில் ஈடுபடுவது மட்டுமன்றி தமிழ் மக்கள் மீது என்னென்ன விதத்திலெல்லாம் ஒடுக்கு முறைகளை மேற்கொள்ள முடியுமோ அவ்வகைகளில் அவர்களின் தேசிய உணர்வை சிதைத்தும், போராட்டங்களை நசித்தும் வருகின்றது.

இவ்வரசு 1977 கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் எல்லோரும் வடக்கு கிழக்கை நோக்கி செல்லும் போது என்ன செய்வதென்று செய்வதறியாது திகைத்து நின்ற மலையக மக்களுக்கு வாழவழி செய்ய என்று தொடங்கிய காந்திய நிறுவனத்தையும் இவ்வரசு திட்டமிட்டு அழித்தது. அதன் செயலாளர் டாக்டர் இராசசுந்தரத்தை பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் விசாரணையற்று அடைத்துப் போட்டது. சிறையில் அவரை வைத்துக் கொண்டே சித்திரவதைகள் செய்து பொய்யான வாக்குமூலங்களில் கையொப்பம் வாங்கியது. அத்துடன் அந் நிறுவனத்தின் சொத்துக்களை அரச ஏவல் படைகளை அனுப்பி துவம்சம் செய்தது. மலையக மக்களை குடியேற்றி உதவி செய்கின்றதென்ற ஒரே காரணத்திற்காகவே அரசு காந்தியத்தை நிர்மூலமாக்கியுள்ளது.

திட்டமிட்ட குடியேற்றங்களை செய்து வரும் இந்த அரசு, காந்தீயம் திட்டமிட்ட குடியேற்றங்களை செய்வதாக குற்றம் சாட்டுகிறது. அரசினால் நியமிக்கப்பட்ட ஒரு இராணுவ குழுவானது, ''வடக்கு கிழக்கில் தமிழர்கள் குடியேற்றப் படுவதினால் அவர்கள் பலமடைந்து வருகிறார்கள் என்றும் ராணுவப் பாதுகாப்புடன் சிங்களக் குடியேற்றத்தை அமைப்பதன் மூலமாகவே இத்தகைய நிலைமையை தவிர்க்க முடியும்'' என்று சிபார்சு செய்ததை அடுத்தே இந்த காந்திய நிறுவனம் நிர்மூலமாக்கப்பட்டது. வடக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழக்கு, மாகாணங்களுக்கிடையிலான நிலத்தொடர்பை துண்டிக்கும் நோக்கிலான அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு முட்டுக்கட்டையாக இருந்ததே.காந்தியத்தை அழிப்பதற்கான அடிப்படைக் காரணமாகும்.

அவை மட்டுமல்லாமல் அரச ஒடுக்குமுறைக்கு எதிராக போராடிய சகல தமிழீழ போராளிகளையும் இவ்வரசுபயங்கர வாதத்தடை சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் கொடியஅடக்குமுறைக்குஉள்ளாக்குகிறது.வேறெந்தநாட்டு சிறைகளிலும் இல்லாத பயங்கரச் சித்திரவதைகள் செய்து வருகின்றது. (அரசின் பயங்கரவாத சித்திரவதைகள் குட்டிமணி, ஜெகன் ஆகியோரின் விசாரணைகளில் அம்பலமாகியுள்ளது) சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளை உறவினர்கள் சந்திக்கவோ அவர்களது நிலைமை பற்றி தெரிந்து கொள்ளவோ இருக்கும் அடிப்படை உரிமைகள் கூட வழங்கப்படுவதில்லை, வடக்கு கிழக்கு மாகாணங்களில் ராணுவத்தினரை மக்களுக்கெதிராக காட்டுமிராண்டித்தனமாக வேட்டையாட அனுமதித்துள்ளது.

இந்த அரசு போராளிகளையும் அப்பாவித் தமிழ்மக்களையும் கொலை செய்யும் ஏவல் படையினருக்கு பதவி உயர்வுகளை வழங்குகிறது. வடக்கில் தமிழர்களை சுடுவதற்கு காவற்படையினருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பயங்கரவாதிகளை அடக்குவதாகக் கூறிக் கொண்டு அரசபயங்கர வாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது.

வீதிகளில் இராணுவத்தினர் போகும் போதும் வரும் போதும் ஒரு கைப்பற்றப்பட்ட பூமியில் எதிர்ப்படைகள் வேட்டையாடுவது போல ராணுவத்தினர் மக்களை தாக்குகின்றனர். சம்பவம் சம்பவமாக சொல்வதானால் இவ்வரசு பதவியேற்றபின் நடந்த எத்தனையோ உயிர்க் கொலைகள், தீவைப்புகள், கொள்ளைகள் பற்றி ஒரு நூலே எழுதிவிட முடியும். எந்த நேரமும் மரணம் வரலாம் என்ற நிலையில் தமிழ் மக்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆயுத



படைகளில் உள்ள தமிழர்களின் நிலைகூட மிகவும் ஆபத்தான நிலையிலேயே இருக்கின்றது. சமயங்களில் அவர்களிடமிருந்து ஆயுதங்கள் பிடுங்கப் படுகின்றன. கடமையைச் செய்யவிடாது தடுக்கப்படுகின்றனர்.

கூட்டுச்சேரா நாடுகளிலும், ஐ.நா. சபையிலும் அங்கம் வகித்துக்கொண்டே ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்து விடும் அரசுகட்கெல்லாம் உதாரணமாக இலங்கை அரசு விளங்குகிறது. உலகப் பிரசித்தி பெற்ற படுகொலைகளெல்லாவற்றையும் மிகவும் அற்பமானவைகளாக்கும் வகையில் அண்மையில் நடைபெற்ற யூலை கலவரங்களுக்கிடையில் வெலிக்கடைச் சிறையில் சிறை வைக்கப்பட்டிருந்த 54 தமிழ் போராளிகள் படுகொலை செய்து குவிக்கப் பட்டனர். தங்கத்துரை, டாக்டர் இராசசுந்தரம், குட்டிமணி, இராஜேந்திரன் உட்பட இந்த 54 போராளிகளினதும் திட்டமிட்ட படுகொலை முயற்சியானது அரசின் சுயரூபத்தை தெளிவாகக் காட்டியுள்ளது. இந்த போராளிகளின் இரத்தங்களில் கைதோய்த்துக் கொண்டே தார்மீகம் பேசுகின்ற இந்த அரசு இதையிட்டு மௌனம் சாதித்து வருகின்றது

இது தன்னெழுச்சியான சம்பவம் என்று புரட்டு பேசுகின்ற ஜே. ஆர் இன் கொலை வெறி அரசின் கீழ் தமிழ்மக்கள் அடுத்தடுத்து பல இனக்கலவரங்களை சந்தித்துள்ளார்கள் 1983 யூலை சிறைப் படுகொலைகளின் போது கொலை செய்யப்பட்ட தோழர் குட்டிமணி அணுவணுவாக வெறிபிடித்த காடையர்களால் சித்திரவதை செய்யப்பட்டு அவரது ஒளி பொருந்திய இரு விழிகளும் உயிருடன் பிடுங்கப்பட்ட பின்னரே அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிய வந்துள்ளது. இத்தகைய வெறியாட்டங்களுக்கு ஆதரவு கொடுக்கும் விதத்தில் இந்த இன வெறி அரசு தொடர்ந்தும் செயல்பட்டு வருகின்றது.

அண்மையில் நடந்துமுடிந்த இனக் கலவரமானது அரசு திட்டமிட்டு செய்த சதியென்பதை யாரும் மறுக்கமுடியாது. 1977 இல் பதவிக்கு வந்தவுடனேயே இனக்கலவரத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டவிழ்த்துவிட்ட இந்த அரசானது அகதிகளாக வடக்கு கிழக்கு நோக்கி ஓடிவந்த தமிழர்களை பார்த்து போர்க்குரல் எழுப்பி எக்காளமிட்டதை யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது, தனது புகழ் பெற்ற பேச்சிலே ஜே. ஆர் ''போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்'' (யுத்த நங் யுத்த சமாதான நங் சமாதான) என்று தமிழ் மக்களை போருக்கு அறைகூவி அழைத்து தமிழ் மக்களை முற்றாக அழிப்பதில் தனக்குள்ள அக்கறையை வெளிக்காட்டினான்.

இந்தக் கலவரத்தில் அரச படையினர் தமது சீருடையுடனேயே கொலைகளிலும், தீவைப்பதிலும், கொள்ளையடிப்பதிலும், பகிரங்கமாக ஈடுபட்டனர். வடக்குக் கிழக்குக்கு வெளியில் வாழும் சகல தமிழ் மக்களையும் அடித்து விரட்டுகிற நோக்கில் இந்தக் கலவரம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது. அரசின் கடந்த அண்மைக்கால நடவடிக்கைகள் இந்த தயாரிப்புகளில் அரசு ஈடுபட்டிருப்பதை அம்பலப் படுத்துகின்றன.

யூலைக்கலவர நாட்களில் வடக்கு கிழக்கில் நாள்தோறும் வீடு புகுந்து இராணுவத்தினர் அப்பாவி மக்களை கொன்று குவித்துக் கொண்டிருக்கையில் வடக்குக் கிழக்குக்கு வெளியே பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்கள் உடைமைகள் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட செய்தியை மட்டும் பெரிது படுத்தி இவ்வரசு தமிழ் மக்களுக்கு எதிரான கலவரத்தை மேலும் வளர்த்து விட்டது. இதன் மூலம் வெளிப்படையாகவே தன்னை சிங்கள ஆட்சி என்று சொல்ல தொடங்கியிருந்த யூ. என். பி. அரசானது நடைமுறையில் தான் தமிழ் மக்களின் அரசல்ல அவர்களின் எதிரியே என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

தமிழ் முதலாளிகளின் தொழில்நிறுவனங்களை நொறுக்கி அவர்களின் உற்பத்தி நிறுவனங்களை பிடுங்கி சிங்கள முதலாளிகளிடம் கையளிக்கும் செயலே இக் கலவரத்தின்



பின்னணியில் இருந்தது. தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கோ அவர்களின் இன்றைய அவல நிலைக்கோ எந்த விதமான உருப்படியான தீர்வும் தரவிரும்பாத இவ்வரசு பயங்கரமான இனப்படுகொலைகளை தானே திட்டமிட்டு நடத்திவிட்டு வெளிநாடுகளில் தனக்கேற்பட்ட அவப்பெயரை நீக்க அவசர அவசரமாக வெளிநாடுகளுக்கு தூது அனுப்பி வைத்தது. இந்தத் தாக்குதல் உண்மையில் தமிழர்கட்கும் அவர்களது உடமைகட்கும் எதிரானதே, வெளிநாட்டினருக்கும் அவர்களது மூலதனங்களிற்கும் எதிரானதல்ல என்ற பிரச்சாரத்தை மேற்கொள்ள இத் தூதுவர்கள் பயன் படுத்தப்பட்டனர்.

1977 இல் பதவிக்கு வந்தவுடன் இனக்கலவரத்தை தூண்டிவிட்ட இவ்வரசு 1979 இல் அவசர காலத் தடைச் சட்டத்தை கொண்டுவந்தது. இந்த பயங்கரமான தடைச் சட்டத்தின் கீழ் இன்பம் செல்வம் போன்ற பல அப்பாவி இளைஞர்கள் எந்த வித காரணங்களும் இன்றி கொன்று குவிக்கப்பட்டார்கள். தமிழ் மக்களுக்கு எதிராக அரச படைகளை ஏவிவிட்டு கொள்ளையிலும், தீவைப்பிலும் நேரடியாக ஈடுபட்ட இராணுவத்தினரை அவர்களும் மனிதர்கள் தானே என்று தட்டிக் கொடுத்து பேசும் இந்த அரசு தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்த்து வைக்கும் என்று நம்பினால் அதைவிட முட்டாள்தனம் இருக்க முடியாது.

தமிழ் மக்களின் பிரச்சனைகளை பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்போம் என்று சொல்லிக்கொண்டே இனவாத வாந்தி எடுக்கும் இந்த அரசை யாரும் நம்பத்தயாராக இல்லை. தமிழ் மக்களுக்கு இந்த அரசுக்குமிடையிலான இன்றைய முரண்பாடு நேச முரண்பாடு அல்ல, இது எதிரிகளுக்கிடையிலான எதிரி முரண்பாடு இந்த முரண்பாடு பேசித் தீர்க்கப்படக் கூடியதல்ல. போராட்டத்தினூடன்றி தீர்க்கப்பட முடியாது. தமிழ் மக்கள் தமது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரச்சனைக்கான தீர்வை காண்பதற்காக போராடித்தீர்க்க வேண்டியது தவிர்க்கமுடியாத வரலாற்று முடிவாகும்.

எனினும் தமிழ் மக்களின் சமரசத்தலைமையிலான கூட்டணியானது. இந்தப் பிரச்சனைக்கு பேச்சு வார்த்தை தீர்வாகலாம் என்று திரும்பவும் சொல்லி வருகின்றது. இந்த காட்டிக்கொடுக்கும் பிற்போக்குத்தனத்தை தமிழ் மக்கள் ஒருபோதும் அங்கீகரிக்க மாட்டார்கள். தமிழ் மக்களின் பிற்போக்கு தலைமைகள் அன்னியத் தலையீட்டால் இந்தப் பிரச்சனை தீர்க்கப்படலாம் என கூறுகின்றது. இது தமிழ் மக்கள் தமது பிரச்சனைகளுக்காக தாமே போராடவேண்டும் என்ற அவசியத்தை மறுதலிக்கும் பிற்போக்கு கும்பலின் பேச்சாகும்.

இந்திய அரசினால் குறிப்பிட்ட சில தார்மீக உதவிகளை தவிர வேறு ஏதும் செய்துவிட முடியாது. இந்திய அரசே தனது நாட்டில் பல தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து அவர்களின் போராட்டங்களை நசுக்கி வருகின்றது. இந்நிலையில் எமது பிரச்சனைகளை தீர்க்குமென நாம் எதிர்பார்க்க முடியாது. சிக்கிம் பிரச்சனைகளிலும் சரி அசாம்காஸ்மீர் நாகலாந்து,மணிப்புரி பிரச்சனைகளிலும் சரி இந்திய அரசு தேசிய விடுதலைக்கு எதிராகசெயல்படுகின்றது.

இந்திய அரசு இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு சார்பாக பேசினால், அது ஒன்றும் தமிழ் மக்களின் தேசிய விடுதலையில் அதற்குள்ள அக்கறையின் காரணமாகவல்ல, மாறாக இந்திய மக்கள், இலங்கை நவபாசிச ஜே. ஆரின் சிங்கள பேரினவாத ஒடுக்கு முறைக்கு எதிராக எழுப்பிய குரல் காரணமாக செய்யும் தவிர்க்கமுடியாத நடவடிக்கையே அது. முடியுமானால் தமிழ் பிற்போக்கு தலைமையும் சிங்கள பிற்போக்கு தலைமையும் அதாவது யு. என். பி அரசையும் தமிழர் கூட்டணியையும் ஏதாவது ஒரு ஒப்பந்தத்தின் கீழ் சமரசம் செய்துவைக்கவே அது முயலும். தமிழ்



மக்களின் போராட்டம் வெற்றியளிப்பது இந்தியாவில் தமது சுயநிர்ணய உரிமைக்கு போராடி வரும் தேசிய இனங்களது எழுச்சிக்கு உரமூட்டுவதாய் அமைந்துவிடா வண்ணம் ஏதாவது ஒரு சமரசத்திட்டத்தை நிலைநாட்டவே இது முற்பட்டுவருகின்றது.

உண்மையில் தமிழ் மக்களது உண்மையான நண்பன் இந்திய அரசல்ல, இந்திய மக்களே அவர்கள்மட்டுமே தமிழ் மக்களது போராட்டத்திற்கு இறுதிவரை உதவுவார்கள். மாறாக இந்திய அரசல்ல. தமிழ் மக்கள் தமிழீழத்தை அனைத்து சுதந்திரமும், இறைமையும் கொண்டவர்களாக வாழ்வதற்காக தமது சுயாதிபத்தியத்திற்காக போராடுகிறார்களேயன்றி இன்னொரு வல்லரசின் அல்லது இன்னொரு நாட்டின் காலனியாக தன்னை மாற்றிக் கொள்வதற்காகவல்ல. தமிழ் மக்களின் தேசிய விடுதலை போராட்டத்தை சில பிற்போக்கு தலைமைகள் பிற வல்லரசுகட்கோ, நாடுகளுக்கோ தாரை வார்த்துக் கொடுத்து அடகுகாரர்களாகவும் மாறவும் தயாராகவுள்ளனர் என்பதை நமது மக்கள் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. தமிழ் மக்கள் தமது பரிபூரண விடுதலையை பெற வேண்டுமாயின் இதை மிகவும் அவதானமாக கொண்டு தமது சொந்த பலத்திலேயே முழு நம்பிக்கை கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 2. தமிழ் மக்களின் பிரச்சனையின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழ் மக்களின் இன்றைய பிரச்சனைகளை வரலாற்று ரீதியில் நோக்குவோமாயின் இப்பிரச்சனைகள் மிக நீண்ட வரலாற்றை உடையதென்பது தெளிவாகும். இலங்கை தீவு இன்றுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட அரசியலமைப்பை உடையதாக நீண்ட காலமாக இருந்திருக்கவில்லை. இலங்கையில் தமிழரும் சிங்களவரும் பல சுதந்திரமான இராச்சியங்களைக் கொண்டிருந்தார்கள். சில காலங்களில் சிங்கள மன்னர்கள் இலங்கை முழுவதையும் ஆண்டதைப் போலவே தமிழ் மன்னர்களும் இலங்கை முழுவதையும் கைப்பற்றி ஆண்டிருக்கின்றனர் என்பதும் உண்மை. இத்தகைய ஓரிரு புறநீங்கல்கள் தவிர அவர்கள் ஒருமித்த அரசாக நீண்ட காலம் இருந்ததில்லை.

அன்று இக்காலத்தில் நாம் தேசங்கள் என்ற பதத்தால் வழங்கும் விதத்தில் இனங்கள் தேசங்களாக வளர்ச்சியடையவில்லை. நிலவுடைமை உற்பத்தி உறவுகளையுடைய கிராமிய உறவு நிலையே நிலவியது. ஒரே கிராமமாயோ சில கிராமங்கள் இணைந்தோ அமைந்த ஒரு கிராமிய நிர்வாக முறையே இருந்தது. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த பொழுது இங்கு மூன்று பிரதான இராச்சியங்கள் இருந்ததை யாரும் மறுக்கமுடியாது. (கண்டி, கோட்டை, யாழ்ப்பாணம்) இவற்றுடன் சில சிற்றரசுகளும் இருந்தன. போர்த்துக்கேயர் கரையோர இராட்சியங்களை கைப்பற்றிய போது அவற்றை தனித் தனியாகவே நிர்வகித்தனர்.



யாழ்ப்பாண இராச்சியம் தனக்கேயுரிய தனித்துவமான பண்பாட்டு பழக்க வழக்கங்களை கொண்டிருந்தது.

போர்த்துக்கேயரை தொடர்ந்து ஒல்லாந்தர் கரையோர இராச்சியங்களை கைப்பற்றிய போதும் அவற்றை தனியாகவே நிர்வகித்தனர். ரோமன் டச்சு சட்டத்தை கொண்டு வந்து நிர்வகித்தபோதும் கூட பிரதேச வழக்குகளையும் கருத்தில் கொண்டனர். தொடர்ந்து வந்த பிரித்தானியர் 1815 இல் கண்டியை கைப்பற்றியதுடன் இலங்கை முழுவதும் அவர்கள் வசமாயிற்று.

### பிரித்தானியர் வரவும் அதன் பின் ஏற்பட்ட மாற்றங்களும்

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையை வியாபார நோக்குடன் தமது சாம்ராஜ்யத்தின் கீழ் கொண்டு வந்தனர். பிரிட்டிசார் இலங்கைக்கு வந்த போது அவர்கள் தொழில் முன்னேற்றமடைந்த ஏகாதிபத்திய நாடாக வளர்ச்சியுற்றிருந்தனர். அவர்கள் தமது சந்தை தேவைக்காகவும் தமது தேவையான மூலதனங்களை பெறுவதற் காகவும் இலங்கையை காலனியாக மாற்றினர். இங்கு ஏற்கனவே இருந்து வந்த விவசாய பொருளாதாரத்தை உடைத்து பெருந்தோட்ட பொருளாதாரத்தை கொண்டு வந்தனர். இந்தப் பெருந்தோட்ட பொருளாதார உற்பத்தி முறைக்கு ஓர் மையப்பட்ட நிர்வாக அமைப்பு தேவைப்பட்டது. அதன் விளைவாகவே கோல்புறூக் சீர்திருத்தம் 1833 இல் கொண்டு வரப்பட்டது. இதன்படி அதுவரை தனித்தனியான நிர்வாக அமைப்பிற்கு கீழிருந்த எல்லாம் ஒரே அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. பிரிட்டிசார் இனங்களை சேர்த்தாள்வதற்காகப் பிரித்தாளும் தந்திரத்தை கையாண்டனர். இனங்களிடையிலான முரண்பாடுகள் உருவாகுவதற்கு முதன் முதலில் வித்திட்டார்கள். பெருந்தோட்ட பொருளாதாரத்தை ஆரம்பித்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரிட்டிசாருக்கு பெருமளவு கூலிகள் தேவைப்பட்டனர். இதனால் மலிவான கூலி வாய்ப்பிற்காகவும் சுதேசிகள் மீதிருக்கும் அவநம்பிக்கை காரணமாகவும் இந்தியாவில் இருந்து தமிழர்களை கூலிகளாக இங்கு கொண்டு வந்தனர். இவர்களை இங்கு கொண்டுவர முன்னரே தரிசு நிலச்சட்டம் கொண்டு வரப்பட்டு கண்டிய நிலப் பிரபுத்துவ விவசாயிகளின் நிலங்களை பறிமுதல் செய்து பெருந்தோட்டங்களாக மாற்றி இருந்தனர். இது பண்டைய நிலப்பிரபுத்துவ விவசாயிகட்கு கூலிகளாக வந்த தமிழ் தொழிலாளர்கள் மீது குரோதம் வளரக் காரணமாயிற்று.

ஆங்கிலேயர் பெருந்தோட்டங்களையும் அதனைச் சார்ந்த பகுதிகளையும் நவீன பொருளாதார உற்பத்தி முறைக்கு விருத்தி செய்தனர். அதே வேளையில் உள்நாட்டு விவசாய உற்பத்தி பிரதேசங்கள் கைவிடப்பட்டன. உணவுப் பொருட்கள் அவர்களது வேறு காலனிகளில் இருந்து கொண்டு வரப்பட்டது. இந்த நடவடிக்கைகள் பொதுவாக வரண்ட பிரதேச மக்களை குறிப்பாக தமிழர்களை அரச பதவிகளிலேயே பிரயோசனம் காணலாம் என்றநிலைமைக்கு தள்ளியது. அத்துடன் பெருந்தோட்டங்களை சுற்றிய வர்த்தக நடவடிக்கைகளில் பங்குபற்றவும் பெருமளவு தமிழர்கள் தென் பகுதியை நோக்கி பெயர்ந்து வந்தனர்.

ஆங்கிலேய ஏகாதிபத்திய உற்பத்தி முறையின் பாதிப்புகள் தமிழ் மக்களின் இயல்பான வளர்ச்சியை சிதைத்து அவர்கள் தமது பகுதிகளில் தேசிய வளர்ச்சி பெறுவதை சிதைத்து பொருளாதாரரீதியாக அவர்கள் தென்பகுதியுடன் இணைக்கப்பட்டதன் காரணமாக தமது பிரதேச பொருளாதார வளர்ச்சி பற்றிய சிந்தனைக்கு இடமில்லாது போயிற்று. இதனால் தமிழ் பகுதிகளில் அக்கறை காட்டாது தென் பகுதியில் உள்ள நிர்வாக வேலைகளில் தங்கியிருக்கும் காலனித்துவ அடிமைத்தனம் வளரத் தொடங்கியது. பிரித்தானியரின் நன்றியுள்ள சேவகர்களாலும் உயர்



நிர்வாகத்தில் உள்ள பலராலும் நிலப்பிரபுத்துவ குடும்பங்களின் பிரதிநிதிகளாலும் சீர்திருத்த கோரிக்கைகளை முன் வைக்கும் நோக்குடன் தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. ஆனால் இத்தேசிய காங்கிரஸ் கூட ஐக்கியமாக இராத நிலைமைகளை சுதந்திரம் பெற முன்பே நாம் காணலாம். இக்காலகட்டத்தில்தான் (:9!5) முஸ்லிம் சிங்கள இனக்கலவரம் நிகழ்ந்து முஸ்லிம் மக்களுக்கு பாரிய அழிவு ஏற்பட்டது. இக்கலவரத்துக்கு காரணமாயிருந்தவர்கள் பௌத்த மத நிறுவனத்தினரே. இன்று ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரர்களாக சொல்லப்படுகின்ற அநாகரிகதர்மபால போன்றோரால் உருவாக்கப்பட்ட பௌத்த சிங்கள இனவாதமே இதற்கு மூலகாரணமாக அமைந்தது. அன்று ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட பௌத்த சிங்கள இனவாதம் அரச மற்றும்சகலதுறைகளிலும்இன்றும் ஆதிக்கம் செலுத்திவருகிறது. இவ் ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட பௌத்த சிங்கள இனவாதத்தின் மீதே சகல இலங்கை அரசுகளும் தமது இருப்பை நிலைநிறுத்திக் கொண்டன.

1920 இல் கண்டியர் கண்டிக்கு சமஷ்டி "உரிமை வேண்டுமென கோரிக்கை முன் வைத்து 'கண்டியர் காங்கிரஸை' உருவாக்கினர். 1924ம் ஆண்டில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கூட கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் நடந்த பகிரங்க கூட்டங்களில் சமஷ்டி முறையே இலங்கையில் சரியான தீர்வை தரும் எனக் கூறினார். அக் காலத்தில் தமிழர்களை அரசாங்க சபையில் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் தமிழ் உயர்தர வர்க்கத்தினராயும் கொழும்பில் உயர்பதவியை வகிப்பவர்களாயும் இருந்ததனால் இக் கோரிக்கை பற்றி எந்தவித கவனமும் செலுத்தப்படவில்லை.

1931 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட டொனமூர் சீர்திருத்தக்காலத்தில் கூடதமிழ்மக்களைபிரதிநிதித்துவப்படுத்திய சேர்.பொன் அருணாசலம் இனவாரிப்பிரதிநிதித்துவத்தை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோரியதேயல்லாமல் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றி சிந்திக்கவே இல்லை. இக்கால கட்டத்தில் தமிழர்கட்கு பூரண உரிமை வழங்கப்படவில்லை எனக் கூறி முதலாவது சட்டசபை தேர்தலை யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் பகிஷ்கரித்தது. இவ்வமைப்பின் இனவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அத்துடன் பிரதேசவாரி பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதுடன் சர்வசனவாக்குரிமையும் வழங்கப்பட்டது. டொனமூரின் மற்றைய சிபாரிசான மேலும் சீர்திருத்தம் கோருவதற்கு அமைச்சரவையின் ஏகமானதான தீர்மானம் தேவை எனக் கூறப்பட்டது. அப்போது அமைச்சரவைக்கு தமிழ் சிங்கள ஐக்கியத்தில் கோரிக்கையை நிறைவேற்றுவதற்குப் பதில் தனிச்சிங்கள மந்திரி சபையை அமைத்தனர். 1944ம் ஆண்டளவில் தற்போதைய ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்த்தனா அரசாங்க சபையிலே கொண்டுவந்த தீர்மானத்தை நோக்குவோமாயின் ஒடுக்குமுறைக்கான திட்டங்கள் அப்போது ஆரம்பிக்கப்பட்டு விட்டன என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். அத் தீர்மானம் ''இலங்கையின் சகல அரசாங்க பாடசாலைகளிலும் போதனாமொழி சிங்களமாக இருக்க வேண்டும். அத்துடன் எல்லா அலுவலகங்களில் சேர்வதற்கான பரீட்சையும் சிங்களமாக இருக்கவேண்டும்,'' எனக் கூறியது. இக் கால கட்டங்களில் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தியோர் பிரித்தானியரை சார்ந்திருத்தலையே பெருமளவு கொள்கையாக கொண்டிருந்தனர். அல்லது எப்படியோ நிலைமையை சமாளித்து ஆட்சியுடன் சமரசம் செய்வோராகவே இருந்தனர். சோல்பரி யாப்பின் மீதான அரசாங்க அமைச்சரவையில் மன்னார் பிரதிநிதி ஜெகநாதன் தியாகராசா பின் வருமாறு பேசினார்.

''நாம் என்ன செய்வது? மக்களை ஆயுதம் தாங்கி கிளர்ச்சி செய்ய சொல்வதா? அல்லது எப்படியாவது நிலைமையை சமாளித்து ஆங்கிலேயருடன் ஒத்துப் போகச்



சொல்வதா? நாம் எமது மக்களை பார்த்து கூறுவது யாதெனில் எப்படியாவது நிலைமையை சமாளித்து ஒத்துப் போகும் படியே.''

இவ்வாறான அன்றைய தலைமை மக்கள் நிலைமையை சமாளிக்கும்படி கூறியதேயன்றி அவர்களை அணிதிரட்டி போராட்டத்துக்கு தயாராகவில்லை. சோல்பரிப் பிரபுவின் முன் கோரிக்கை சமர்ப்பிக்கவென ஆரம்பிக்கப்பட்ட தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் 50: 50 (ஐம்பதுக்கு ஐம்பது) கோரிக்கையை முன் வைத்தார். இது பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் சம பிரதிநிதித்துவம் கோரியது.

சமபிரதிநிதித்துவ கோரிக்கை நிராகரிக்கப்பட்டு சோல்பரி யாப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது. சோல்பரி யாப்பின் கீழ் முதலாவது பாராளுமன்ற தேர்தலில் திரு ஜி. ஜி அவர்கள், திரு அருணாசலம் மகாதேவாவை தோற்கடித்து பாராளுமன்றம் சென்றார். ஆனால் அவர் கூட அமைச்சரவையில் சேர்ந்ததுமட்டுமல்ல இந்திய பாகிஸ்தானிய குடியுரிமை சட்டத்தை அங்கீகரித்தார். 1949இல் இந்திய தோட்ட தொழிலாளரை குடியுரிமை இல்லாதவராக்க வழி செய்யப்படுவதற்கு காரணமாகவும் இருந்தார். D. S சேனநாயக்காவின் இந்த நடவடிக்கையானது பலபகுதிகளில் சிங்கள, பௌத்தர்களின் வாக்குப்பலத்தை பிரயோகிக்க முடியாததால் எழுந்ததே. இலங்கையின் சுதந்திரமானது பெருமளவு தமிழர்களின் குடியுரிமை பறிப்பதுடன் ஆரம்பமானது.

அக்கட்டத்தில் இடது சாரிகள் பாராளுமன்றத்தில் எதிர்ப்பு காட்டியதுடன் திருப்திப்பட்டுக் கொண்டனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அடையாள வேலை நிறுத்தத்துடன் தனது எதிர்ப்பு போராட்டத்தை நிறுத்திக் கொண்டது. 1949 இல் தமிழ் காங்கிரஸின் குடியுரிமைப் பறிப்புக்கு ஒத்துழைப்பை எதிர்த்து S. J. V. செல்வநாயகம், வன்னிய சிங்கம், ஆகியோர் அதிலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரிந்து தமிழரசுக் கட்சியை தொடங்கினர். இவர்களின் பின்னால் மத்தியதரவர்க்கத்தினரும் தமிழ் தேசிய வாதிகளும் அணி திரண்டனர். நாளடைவில் இக்கட்சியினர் பெருமளவு பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றியதுடன் தமிழ் மக்களது தலைமையையும் ஏற்றுக் கொண்டனர்.

தலைமை தமிழ் காங்கிரசின் தலைமையில் இருந்து தமிழரசுக் கட்சியினரின் கைக்கு மாறியதும் தமிழ் உயர் வர்க்கத்தினர் பெரு முதலாளிகள், கொழும்பில் உள்ள ஏற்றுமதி இறக்குமதிகளில் ஈடுபட்டோர் ஆகியோர் இக்கட்சியை தமது நலன்கட்கு பயன்படுத்தத் தொடங்கினர். இதன் காரணமாக தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால தீவிரம் மந்தித்து, பேரம் பேசல் ஒப்பந்தங்கள் செய்தல், தனிமனித செல்வாக்கில் நம்பிக்கை வைத்தல் என்று சீரழியத் தொடங்கியது.

ஆரம்ப காலத்தில் இருந்த தேசிய வாதத் தன்மை தமிழரசுக் கட்சியிடமிருந்து காலப் போக்கில் சிறிது சிறிதாக மறைய தொடங்கியது. இதனால் எக்காரணத்திற்காக காங்கிரசில் இருந்து பிரிந்து தமிழரசுக் கட்சியை உருவாக்கினார்களோ அக்காரணமான மலையக மக்களின் வாக்குரிமை பறிப்பு சம்பந்தமாக இவர்கள் எந்தவித உருப்படியான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அசல் பாராளுமன்ற பேரம் பேசுவோர்களாக மாறிவிட்ட இவர்கட்கு வாக்குரிமை அற்ற மலையக தொழிலாளர்கள் பிரச்சனை பற்றிய அக்கறையின்மை ஏற்பட்டது வியப்புக்குரிய ஒன்றல்ல.

1956 இல் களனி மாநாட்டில் யு. என். பி. யானது தமிழ் சிங்களச் சட்டத்தை கொண்டு வந்தது. சிங்கள மொழியை ஆட்சி மொழியாக ஆக்கப் போவதாக அறிவித்தது. S. W. R. D. பண்டார நாயக்கா, 'தனது ஐக்கிய முன்னணி ஆட்சியமைத்தால் 24 மணி நேரத்தில் சிங்கள மொழி சட்டத்தை கொண்டு வருவதாக உறுதியளித்தார். அவ்வாறே ஆட்சியை அமைத்ததும் சிங்களம் மட்டும்



சட்டத்தை கொண்டுவந்தார். இச்சட்டத்தை எதிர்த்து காலிமுகத் திடலில் தமிழ்த் தலைவர்கள் சத்தியாகிரகம் செய்தனர். இவர்கள் சிங்கள காடையர்களால் தாக்கப்பட்டதுடன் இவர்கள் மீது சிறுநீர் கழிக்குமளவுக்கு நிலைமை மோசமடைந்திருந்தது.

எனினும் தலைவர்கள் பண்டார நாயக்காவுடன் பேரம் பேசி பண்டா செல்வா ஒப்பந்தத்தை செய்து கொண்டனர். இலங்கையின் வரலாற்றிலேயே சிறுபான்மையினர் பிரச்சனைகளை தீர்க்கும் விடயத்தில் இவ் ஒப்பந்தமானது ஒரு முக்கிய பங்கை வகித்தது. ஆயினும் இன்றைய அதி உத்தமஜே. ஆர். இன் கண்டி யாத்திரையைத் தொடர்ந்து, தமிழர் தளபதி அமிர்தலிங்கத்தால் நடத்தப்பட்ட சிறீ எதிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்து, இவ் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதால் ஏற்பட்ட கசப்புணர்வும் 1958 இல் பெரும் இனக்கலவரமாக உருவாகக் காரணமாயின. முதன் முதலாக தமிழர்கள் உயிருடன் கொளுத்தப்பட்டனர். உடமைகள் பறிக்கப்பட்டன, கப்பலில் ஏற்றி யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டனர்.

S.W.R.D. பண்டார நாயக்கா சிங்கள தேசிய வாதத்தை வளர்ப்பதில் முன்னணியில் நின்றார். மொழி உணர்வு, சுதேச கலாச்சாரம், பொருளாதார அபிவிருத்தி போன்ற தேசிய வாத கருத்துக்களை முன் வைத்தார். பண்டார நாயக்காவால் கொண்டுவரப்பட்ட முற்போக்கு திட்டமான அன்னிய தளங்களை அகற்றுதல், பாடசாலைகளை தேசிய மயமாக்குதல் அமெரிக்க எண்ணெய் கம்பெனிகளை தேசியமயமாக்கல் போன்ற சரியான நடவடிக்கைகளை எதிர்த்ததன் மூலம் அசல் அன்னிய விசுவாசிகளாக, தேசிய வளர்ச்சியில் அக்கறையற்றவர்களாகவும் விளங்கினர். ஆயினும் பண்டார நாயக்காவின் சிங்கள தேசிய வாதம் பேரினவாதமாக உருவெடுத்த பின்னரே தமிழ் தேசியவாதம் வளரத் தொடங்கியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயினும் அது பலபரிமாணங்களிலும் (தளங்கள்) வளர்ந்தெடுக்கப்படவில்லை. 1958 இனக்கலவரத்தை தொடர்ந்து 1961 இல் கொண்டுவரப்பட்ட நீதிமன்ற மொழிச் சட்டத்தை எதிர்த்து பரவலான சத்தியாக்கிரக இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் மிகப் பெரிய வெகுஜனப் போராட்டமாக இதைக் கருதலாம். இப்போராட்டத்தில் பெருமளவு தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள கச்சேரிகளில் அணிதிரண்டனர். அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு தலைவர்கள் கைதானதும் இப் போராட்டம் தானாக அடங்கிற்று. எவ்வித திட்டமுமில்லாமல் ஒருங்கமைப்பை ஏற்படுத்தாது ஆரம்பிக்கப்பட்டதால் இப்போராட்டம் தானாகவே அடங்கிப் போயிற்று. தலைவர்கள் விடுதலையானதும் தொடர்ந்தும் போராடுவதற்குப் பதில் சரணாகதிப் பாதையை மேற் கொண்டனர். இதில் மனப்பூர்வமாக முஸ்லிம் மக்களும் கலந்து கொண்டனர்.

ஆயினும் இதன் பின்னர் தமிழ் தலைவர்கள் முஸ்லிம் மக்களை ஒன்று சேர்த்துப் போராடுவதில் அக்கறை காட்டாமையும் முஸ்லிம் தலைவர்களின் சந்தர்பப்ப போக்கும், பொதுவான இப்பிரச்சனைக்கான போராட்டங்களில் முஸ்லிம்களின் ஈடுபாட்டை குறைத்தது. முஸ்லிம் மக்களின் இன்றைய சந்தர்ப்பவாதப் போக்கிற்கு அவர்களை தலைமை தாங்கும் பெருவர்த்தகர்களே காரணமாகும்.

இக் கால கட்டத்தில் தமிழரசுக் கட்சிக்குள் இருந்த தேசியவாத சக்திகளாலே இப்போராட்டம் தொடங்கப்பட்டது. ஆனால் இதைத்தொடர்ந்து படிப்படியாகதமிழரசுக் கட்சி பெரும் முதலாளிகளின் கைகளிற்கு மாறத் தொடங்கியது. அதன் வெளிப்பாடாகவே 1965ல் யு.என்.பியுடன் கூட்டு சேர்ந்ததும் நிபந்தனையற்று திருச்செல்வம் மந்திரி சபையில் இடம்பெற்றதும் நடைபெற்றது. திருச் செல்வம் மந்திரியாக இருந்த போது திருகோணமலையில் பல குடி



யேற்றங்கள் நடாத்தப்பட்டன. 1956 இல் தமிழ்மொழி விசேட மசோதாவிற்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இடது சாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சியினரும் சேர்ந்து தமிழ்விரோத கோசங்களுடன் ஊர்வலம் சென்றனர். இது தமது கட்சி இலாபத்திற்காக எந்த பாராளுமன்ற அரசியல் கட்சியும், அரசை எதிர்க்கும் போக்கில் இனவாத கோச மெழுப்ப தயங்க மாட்டா என உறுதிப்படுத்திற்று.

1970 ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு ஆப்பு வைக்கும் நோக்கில் தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டது. சிங்கள மாணவர்களும் இளைஞர்களும் சில பௌத்த நிறுவனங்களின் வழிகாட்டலில் தமிழ் மாணவர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதன் விளைவே இந்த தரப்படுத்தலாகும். இத் தரப்படுத்தல் தான் தமிழ் இளைஞர்களை விழிப்படைய வைத்ததும் இன்றைய இயக்கங்கட்கான முன்னோடிகளை உருவாக்கியது எனலாம். இத் தலைமைகளால் வழமை போலவே இந்த தரப்படுத்தலுக்கு எதிராகவும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்க முயலவில்லை. அக்காலத்தில் தலைமையின் போக்கையும் அதன் கையாலாகாத்தனத்தையும் எஸ். ஜே. வி: செல்வநாயகத்தின் பேச்சில் இருந்து தெரிந்து கொள்ளலாம். இவர் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்ததும், தமிழ் மக்களை இனி கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று கையை விரித்தார். ஆயினும் தரப்படுத்தலை எதிர்த்து மாணவர்கள் கிளர்ந்தெழத் தொடங்கினர். இவர்களது கோஷமாகவே தனிநாடு முதன்முதலில் முன்வைக்கப்பட்டு மக்களிடையே பிரபல்யம் அடைந்தது.

தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் காலத்திற்கு காலம் தமிழரசுக்கட்சி சந்தர்ப்ப வாத தன்மையை கடைப்பிடித்து வந்ததை அவதானிக்கலாம். 1969ம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மக்களால் நடாத்தப்பட்ட சமூக ஒடுக்குமுறைக் கெதிராக ஆலயப் பிரவேசம், தேனீர் கடைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரவேசம் போன்ற போராட்டங்களில் ஆதரவளிக்காதது மட்டுமன்றி இன்னொரு வியட்நாமை இங்கு உருவாக்காதீர்கள் என்றும் போராட்டக்காரரை நோக்கி குரல்கொடுத்தது. இந்தத் தலைமை தமிழ் மாணவர் பேரவையின் தனிநாட்டு கோஷம் பிரபல்யம் அடைந்ததும் தமிழரசுக்கட்சி தமிழ காங்கிரஸ் என்பன ஒன்று சேர்ந்து, தமிழர் கூட்டணியை உருவாக்கியது. பின்னர் அது தமிழர் விடுதலைக்கூட்டணியாக பெயர் மாற்றப்பட்டது. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஜி. ஜி. பொன்னம்பலம், தொண்டமான் ஆகிய முக்கூட்டுத் தலைவர்களை கொண்ட இந்த கூட்டணியின் தலைவர்கள் 1977 தேர்தலுக்கு முன் ஒருவர் பின் ஒருவராக மறைந்தனர். எஞ்சிய தொண்டமானும் தேர்தலில் கூட்டணியின்காலைவாரி விட்டார். இவர் தேர்தலின்பின் யு. என், பி யுடன் சேர்ந்து அமைச்சராகவும் ஆனார்.

1970 — 77 காலம் தமிழ் இளைஞர்களின் தமிழீழக்கோரிக்கையை பிரபலமடையும் விதத்தில் அன்றைய ஐக்கிய முன்னணி அரசு நடந்து கொண்டது. நாட்டின் நிலைமையை அவசரக்கால சட்டத்தின் கீழ் கேள்வி முறையின்றி அப்பாவி இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் விசாரணையின்றி அடைத்து வைக்கப் பட்டார்கள். 1972ம் ஆண்டு குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பட்டது. இதில் டொனமூர் சட்டத்திலே சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அளித்த 29வது ஷரத்தும் நீக்கப் பட்டது. 1974இல் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் 9 உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டதும், புத்தளம் பள்ளிவாசலில் 5 முஸ்லீம்கள் 1976 இல் கொல்லப்பட்டதும் தனி நாட்டுக் கோரிக்கை பிரபல்யம் அடைந்ததற்கான முக்கிய காரணிகள் எனலாம்.

1977ம்ஆண்டு தேர்தலில்தமிழ்மக்கள் தனிநாடாகதமது தேசத்தை பிரித்து கொள்ள விரும்புகின்றார்கள் என்ற அபிப் பிராயத்தை வெளிப்படுத்தியது. சர்வஜன வாக்கெடுப்பாக கூட்டணியால் பிரகடனப்படுத்தப்பட்டது. எல்லா



தேர்தல் மேடைகளிலும் தமிழ் மக்களைப் வெற்று உணர்ச்சிக்குள்ளாக்கும் வீராவேசப் பேச்சுக்கள் பொழிந்து தள்ளப் பட்டன. தமிழீழம் அமைப்போம் திருகோண மலையை தலைநகராக்குவோம் என்றெல்லாம் பேசப்பட்டது. விடுதலைப் போராட்டத்தில் மக்களின் பங்கு பற்றி எதுவும் சொல்லப்படாமல் ''வெளவால் வரும் பின்னால் விடுதலை கிடைக்கும்'' என்றெல்லாம் ஆசை காட்டப் பட்டது. மொத்தத்தில் தமிழ் மக்கள் உணர்ச்சியூட்டப்பட்டு தமிழர் கூட்டணியின் தேர்தல் வெற்றியே தமிழீழத்தின் வெற்றியென எண்ணவைக்கப்பட்டது. தேர்தலில் வெற்றி கிடைத்ததும் தமிழ் தேசிய மன்றம் அமைப்போம் என்று வாக்குறுதி அளிக்கப்பட்ட போதும் 1977 தேர்தலை தொடர்ந்து யூ. என். பி. அரசாலும், அரச குண்டர்களாலும் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரத்தில் இருந்து தமிழ் மக்களை பாதுகாக்கும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவோ அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர தீர்வுகாட்டவோ இந்த வாய்வீச்சு கூட்டணி வீரர்கள் தயாராகவில்லை.

இவர்கள் குறிப்பிட்ட வெள்வாலுக்கு பதிலாக இனக்கலவரம்தான் வந்தது. இனக்கலவரம் ஆயிரக்கணக்கில மக்களை அகதிகளாக்கி ஓட ஓட விரட்டியடித்த பின்னரும் இவர்கள் தமது போராட்ட முறைகளை சரியாக நெறிப் படுத்தாது திரும்பவும் ஜே. ஆரில் நம்பிக்கை வைத்து அவர்களிடம் சமரசம் பேசத் துணிந்தனர். எந்தவித அதிகாரமும் அற்ற வெற்றுத் தோட்டாவான மாவட்ட அபிவிருத்தி சபைகளை ஏற்றுக்கொண்டு தமிழீழமே வந்து விட்டதுபோல் கூச்சல் போட்டனர். இவர்கள் என்னதான் அரசுடன் சமரசப்போக்கை கடைப்பிடித்த போதும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை வளர்ந்து வந்ததேயன்றி எவ்விதத்திலும் குறைந்து விடவில்லை. மாவட்ட அபிவிருத்தி சபை என்ற மாயையைக்காட்டி தமிழ் மக்களை இவ்வரசு ஏமாற்றப்பார்த்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இத்திட்டத்துடன் பின்னணியில் நின்று செயற்பட்டவர் ஜே. ஆரின் ஆலோசகரும் எஸ். ஜே. வி செல்வநாயகத்தின் மருமகன் வில்சன் ஆவர். இத்திட்டம் அடிப்படையில் ஜே. ஆரின் கரங்கள் சகல பகுதிகளிலும் இருக்கும் நிர்வாக விரிவாக்கமே. மாவட்ட அபிவிருத்தி சபையை கட்டுப்படுத்தும் அதிகாரம் மாவட்ட அமைச்சர்கட்கு உண்டு. அமைச்சர்களை நியமிப்பவரோ ஜே. ஆர். எனவே மொத்தத்தில் மாவட்ட அபிவிருத்தி சபை எந்தவித சுயதன்மையும் அற்றது. எதுவித நிறைவேற்று அதிகாரங்களும் அற்றது.

இது வெறும் ஆலோசனை சபையாகவே இயங்கமுடியும். ஆகக் குறைந்தது திட்டமிட்ட குடியேற்றங்களை தடுக்கும் சக்தியாவது அற்ற இவ் வெற்றுப்பீரங்கியை தமிழீழத்தின் முதலாவதுபடி என்று பிதற்றியது கூட்டணி. மாவட்ட அபிவிருத்தி சபைக்கும் சிறுபான்மையோர் பிரச்சனைக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று கூறிய அதி உத்தமர் அதேவாயால் சிறுபான்மையினங்களின் பிரச்சனையை தீர்க்கவே மாவட்ட அபிவிருத்த சபையை உருவாக்கியதாகவும் அதற்கு கூடுதல் அதிகாரம் வழங்க சர்வகட்சி மகாநாடு கூட்டப்பட்டதாகவும் ஒத்துழைப்பின்மையால் கைவிட்டதாகவும் பொய் கூறித் திரிந்தார். இதுவரை வந்த சிங்கள அரசுகள் தமிழ்பகுதிகளின் தொழில் வளர்ச்சிக்கு உதவாதது மாத்திரமன்றி சுயமாக அங்கு கைத்தொழில் வளர்ச்சி ஏற்படவும் இடமளிக்கவில்லை. தமிழ் பகுதிகளில் உள்ள மூலவளங்களை பாவித்து தொழிற்சாலை அமைக்க அனுமதியை அரசு வழங்கவில்லை. இவ்வதிகாரம் எதுவும் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு வழங்கப்படவில்லை.

## திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும் தமிழ் பிரதேசபறிப்பும்

1958 இனக்கலவரத்தின் பின்னரே தமிழ்மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்கள் பற்றி ஓரளவு அக்கறை காட்டத்



தொடங்கினர். தமது பாதுகாப்பிற்காக பாரம்பரிய பிர
தேசங்கள் அவசியம் என்ற உணர்வு அவர்களிடம் மேலோங்
கத் தொடங்கியது. ஆனால் D. S. சேனநாயக்காவின்
காணிக் கொள்கைகளுக்கு ஏற்ப 1950 இல் ஆரம்பிக்கப்
பட்ட கல்லோயாத்திட்டம் பெருமளவில்கிழக்கு மாகாணத்
தில் சிங்களவர் குடியேற காரணமாய் அமைந்தது. இக்கல்
லோயக் குடியேற்றத்திட்டத்தில் பட்டிப்பளையாக இருந்த
தமிழ்ப்பகுதி அம்பாறையாக மாறியது. தமிழ்க்கிராமங்கள்
பறிக்கப்பட்டன. கல்லோயாத்திட்டத்தில் மிகச்சில தமிழ்க்
குடியேற்றங்களும் பெயருக்காக வழங்கப்பட்ட போதும்
அவையும் ஒன்றில் பாசன வசதி அற்றதாகவோ, அல்லது
அவற்றின்பாசனம் சிங்களப்பகுதியினூடே செல்வதாகவோ,
தான் இருந்தது.

இது மட்டுமன்றி இத்தமிழ்க் குடியேற்றங்களில் சிங்க
ளவர் பலாத்காரமாக குடியேறுவதும் கொள்ளையடிப்பதும்
இதன் காரணமாக சிறுசண்டைகளும் ஏற்படத் தொடங்
கின. இதனால் பல தமிழர்கள் காணிகளை விற்றுவிட்டு
அல்லது விட்டுவிட்டு வந்தனர். கல்லோயாத் திட்டத்தை
தொடர்ந்து அல்லை, கந்தளாய் திட்டங்கள் உருவாக்கபடத்
தொடங்கின. இது திருகோணமலை மாவட்டத்தையும்
சிங்கள மயப்படுத்தும் நோக்குடன் செய்யப்பட்டது.
பதவியாத்திட்டம், பறையனாறு என்ற பெயரில் இருந்த
தமிழ் பிரதேசத்தின் பெயரை இப்படி மாற்றிக் கொண்டு
வரப்பட்டது. இது உள்ள ஏனைய திட்டங்களில் மிகவும்
மோசமான திட்டமாகும். வடக்கு கிழக்கு மாகாணங்களில்
உள்ள நிலரீதியான தொடர்பை துண்டாடும் நோக்குடன்
இத்திட்டம் கொண்டுவரப்பட்டது.

இந்தக் குடியேற்றத்திட்டங்களின் அடிப்படையாவது தமிழ் மக்களை அவர்களது பாரம் பரிய பிரதேசங்களிலும் சிறுபான்மையினராக்குவதே. அதாவது ஒரு பல மற்ற இனக்குழுவாக சிதைப்பதே ஆகும். இதில் யு. என். பி அரசு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திட்டமிட்டு ஈடுபட்டது. சுதந்திரக் கட்சிக் காலங்களிலும் குடியேற்றங்கள் ஏற்பட்ட போதும் யு. என். பி.யே திட்டமிட்ட நிலைப்பாட்டில் மிகுந்த அக்கறை காட்டியது. அத்துடன் தமிழ் மக்களின் சுயமான குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களை அல்லது குடியேற்ற முயற்சிகளை பலவந்தமாகத் தடுத்து நிறுத்தியது.

தற்போது நீசவாவி, சேருவாவில, திரியாய் போன்ற புனித நகரத்திட்டங்களும், கொக்குளாய், புல்மோட்டை, நாயாறு போன்றவை மீனவர் குடியேற்றங்களாய் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த மீனவர் குடியேற்றங்களில், தமிழ் மீனவரின் மூலவளச் சுரண்டல் நடைபெறுவதுடன் அவர்கள் அச்சுறுத்தப்படுதலும் தொடர்கின்றது. மன்னாரில் அரச முந்திரிக் கூட்டு ஸ்தாபனம் என்ற பெயரிலும் குடியேற்றங்கள் தொடர்வதாக நாம் முன்பு பார்த்தோம். மன்னாரில் கொண்டாச்சி இன்று சிங்களமயமாக்கப்பட்டு விட்டது.

அண்மையில் நடந்த இனக் கலவரத்தைத் தொடர்ந்து பௌத்தமத நிறுவனங்களின் துணையுடன் அரச வாகனங்களில் கொண்டுவரப்பட்டு பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வடமுனை மற்றும் கிழக்கு மாகாணத்தின் பகுதிகளில் குடியேற்றப்பட்டனர். இவர்களுக்கு ஆயுதப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. இவர்களை வெளியேறும்படி ஜே. ஆர். உத்தரவு இட்ட போதும் இவர்கள் வெளியேறவில்லை. மதநிறுவனங்களின் பூரண பாதுகாப்பில் இருக்கும் இவர்களை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கைக்கு சட்டப்பலம் இல்லை எனக்கூறி புதிய சட்டம் கொண்டுவரப்பட்ட போதும் இச்சட்டம் ஏற்கனவே வடக்குக் கிழக்கில் சுயமாகக் குடியேறிய தமிழர்களை குறிவைத்தே தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசினதும் அரச முக்கியஸ்தர்களினதும் செல்லப் பிள்ளைகளாகச் சீராட்டப்படும் இந்த அத்துமீறிய குடியேற்றக்காரர்களினால் 300க்கு மேற்பட்ட தமிழ் முஸ்லீம் குடும்பங்கள் வெளியேறியுள்ளன. தமிழ் முஸ்லீம்களின் சொந்த நிலங்களில் சொந்தமாக விதைப்பினை மேற்கொண்டுள்ள இந்தக் குடியேற்றக்காரர்களுக்கு, தமிழ் அகதிகளுக்கென கலவர காலத்தில் வெளிநாடுகளால் வழங்கப்பட்ட கூடாரங்கள் வழங்கப்பட்டன. ஆக மொத்தத்தில் தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைகளை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.



(1) திட்டமிட்ட குடியேற்றங்களை இராணுவ பலத்துடன் ஏற்படுத்தி தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பிடுங்குதல், அவர்கள் பிரதேசத்திலேயே அவர்களை பலமற்றவர்களாக்குதல். தமிழ் குடியேற்றங்களை அகற்றல். தமிழர் குடியேற்றங்களிலுள்ள குடிசைகளை தீயிட்டுப் பொசுக்கல், அவர்களை விரட்டல்.

(2) தமிழ் மக்களின் மூலவளங்களை சுரண்டுதல் மீன் வளங்களை அபகரிக்கும் நோக்குடன் சிங்கள மீனவர்க்கு தமிழ்ப் பகுதியில் வாய்ப்பளித்தல்.

(3) வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவக் காடைத் தனங்களை கட்டவிழ்த்துவிடல், இராணுவத் தளங்களை ஏற்படுத்தல், அரச பயங்கரவாத நடவடிக்கைகளையும் சட்டங்களையும் கொண்டுவரல், தமிழ் மக்களை கேள்வி முறையற்றுச் சுட்டுத்தள்ளும் அதிகாரத்தை ஆயுதப்படையினருக்கு வழங்கல், இறந்த உடல்களை கூட தகனம் செய்ய உரிமை மறுத்தல்.

(4) திட்டமிட்ட இனக்கலவரங்களால் தமிழ் மக்களின் மானங்களையும் உயிர் உடமைகளையும் பறித்து அச்சுறுத்தல்.

(5) எந்தவித ஜனநாயக உரிமைகளையும் இல்லாமல் ஒழித்தலும், அதற்கெதிரான போராட்டங்களுக்குத் தடை விதித்தலும்.

(6) உயர்கல்வி, வேலை வாய்ப்பில் புறக்கணிக்கப்படல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(7) தமிழ் மக்கள் தமது சொந்த மொழியிலேயே கருமமாற்ற முடியாமை.

(8) தமிழ்ப்பகுதிகளின் அபிவிருத்திகள் புறக்கணிக்கப்படலும், கைத் தொழில் அபிவிருத்திக்குத் தடையாக இருத்தலும்.

(9) தமிழ் மக்களின் கலாச்சார ரீதியான புறக்கணிப்பு.

மொத்தத்தில் தமிழ் மக்களின் பிரச்சனையானது. ஆரம்பத்தில் அவர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக கருதப்படத் தொடங்கியதிலிருந்து இன்றுள்ள இன ஒடுக்கு முறை வடிவத்திற்கு மாற்றமடைந்துள்ளது. இந்த U.N.P. அரசானது நாம் மேலே தொகுத்துப் பார்த்த நடவடிக்கைகள் மூலமாக தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக இல்லாதொழிக்கும் நோக்கிலேயே செயல்பட்டு வருகின்றது.

எனவே இந்த ஒடுக்கு முறையின் இன்றுள்ள வடிவம் ஒரு தேசிய இனம் மீதான ஒடுக்கு முறை வடிவமே. இத்தகைய ஒடுக்கு முறையை எதிர்க்கத் தலைமையேற்றுப் போராடும் சக்தி ஏற்கனவே இருந்த சாதாரண நிலைமைகளில் கூட தடம் புரண்ட கூட்டணிக்கு அறவே சாத்தியமற்றதாகும். கூர்மையடைந்துள்ள இப்பிரச்சனைக்கான தீர்வினை போராட்டமொன்றே தரமுடியுமென்பதால் சமரசப் போக்குள்ள கூட்டணி, மக்களிடம் இருந்த தூக்கியெறிப்பட்டது. அதிசயமல்ல.

## மலையக மக்கள் பிரச்சினையும் அதன் பின்னணியும்

மலையக மக்கள் என்று சொல்லும் போது, இலங்கையின் மலையகத்தில் பெருந்தோட்டங்களில் தொழிலாளராக (கூலி விவசாயிகளாக) வேலை செய்கின்ற மக்களையே கருதுகிறோம். தேயிலை, ரப்பர் தோட்டங்களில் வாழ்கின்ற இவர்களை விட, கொழும்பு போன்ற நகர் புறங்களுக்கு இவர்களில் ஒரு பகுதியினர் இடம் பெயர்ந்து சென்றுள்ள போதும் இவர்களும் சமூக, கலாசார பண்பாட்டு அம்சங்களில் மலையக் மக்களைப் போலவே இனங்காட்டுவதால் நாம் இவர்களையும் மலையக மக்களுள் அடக்குகிறோம், கொழும்பில் வாழும் செட்டிகள் மற்றும் இந்தியவம்சாவளி இந்திய முதலாளிகள் தம்மை மலையக மக்களாக இனங்காட்டுவதில்லை. நாமும் அவர்களை மலையக மக்களாக ஏற்றுக் கொள்ளவில்லை.

மலையக மக்கள் பிரிட்டிசாரால் 1830ம் ஆண்டளவில் தமது பெருந்தோட்டங்களை ஆரம்பிக்கையில் கூலிகளாக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டோராவர். தமது காலனித்துவ தேவை கருதிப் பிரிட்டிசார் ஆரம்பித்த இந்தப் பெருந்தோட்டங்களுக்கான போக்குவரத்து வசதிகளுக்காக ரெயில் பாதைக்ள் மற்றும் வீதிகள் போடுவதில் கூலிகளாகப் பயன்படுத்தப்பட்ட இவர்கள், பின்னர் கோப்பி தோட்டங்களிலும் பயிர் செய்கைக்கும் பயன்படுத்தப்பட்டனர்.

கோப்பி செய்கையில் ஏற்பட்ட வீழச்சியால் அல்லது பயனளிக்காது போனதால் தேயிலை, ரப்பர், தோட்டங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாக்கப்பட்டன. இத் தோட்டங்கள் உருவாகும் வரை இந்தியாவில் இருந்து வந்து போய்க் கொண்டிருந்த இந்த தொழிலாளர்கள் தேயிலை ரப்பர் தோட்டங்கள் வரைத் தொடங்கியதும் நிரந்தரமாக இங்கேயே தங்கத் தொடங்கினர். இது குறிப்பாக 1860 இலேயே தொடங்கியது. பெருந்தோட்டப் பயிற் செய்கைக்கு தேவையான பெருமளவு தொழிலாளர்கள் இங்கு கிடைக்காமையும், குறைந்த கூலிக்கு சிங்களத் தொழிலாளர்கள் வேலை செய்ய தயாராக இல்லாமையும், அக்காலத்தில் தமிழ்நாட்டில் நிலவியவரட்சி சூழலும் இத்தொழிலாளர்களை இங்கு கொண்டு வர காரணமாயின.

சிங்கள நிலப்பிரபுக்களின் நிலங்கள் தோட்டங்களுக்காகப் பறிக்கப்பட்டமையால் இவர்கள் பிரிட்டிசாரிடம் குரோதம் கொண்டிருந்தனர். இந்தக் குரோதம் பிரிட்டிசாருக் கெதிராக வளர்ந்தது மட்டுமல்லாமல் நவீன அடிமைகளாக கொணரப்பட்ட இந்திய தமிழரையும் எதிரிகளாகப் பார்க்க வைத்தது. அயல் சிங்கள கிராமங்களுடனும் கூட தொடர்புகள் ஏற்படாவண்ணம் தோட்டங்களில் வாழும் தொழிலாளர்கள் அயலவரிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டனர். இது சிங்கள மக்களுடனான பரஸ்பர நல்லுறவு ஏற்படும் வாய்ப்பை மலையக தொழிலாளர்களுக்கு இல்லாமல் செய்தது.

தோட்டத் தொழிலாளர் முதலாளிய உற்பத்தி முறையுடன் சம்பந்தப்பட்டு இருந்த போதும் இவர்களிற்கு தமது உழைப்பை சுதந்திரமாக விற்கும் பூரண தொழில் சுதந்திரம் இருக்கவில்லை.

ஒரு தோட்டத்தில் இருந்து இன்னொரு தோட்டத்திற்கு நிர்வாகத்தின் அனுமதியின்றி செல்ல முடியாத நவீன அடிமைகளாகவே இருந்தனர். தென்னிந்திய நிலமானிய உறவு முறையின் எச்ச சொச்சங்கள் இங்கேயும் பாதித்தன



கங்காணிமார் உயர்சாதிக்காரராயும், தொழிலாளர்கள் குறைந்த சாதிக்காரராகவும் இருப்பதிலிருந்து இதை அறியலாம். உண்மையில் தோட்ட தொழிலாளர் நிலமானிய சமூக அமைப்பை உடைத்தெறிந்து இயல்பாக உருவான தொழிலாளிகளாக இருக்கவில்லை. இவர்கள் பிரிட்டிசாரின் ஏகாதிபத்திய கரங்களால் தொழிலாளராக்கப்பட்டவர்கள். மிக முன்னேறிய உற்பத்தி கருவிகளான இயந்திரங்களுடன் வேலை செய்யும்ஆலைத்தொழிலாளருக்குஇயல்பாகஉருவாகும் போர்க் குணம் இவர்களிடம் காணப்படவில்லை.

பழைய நிலமானிய அமைப்புக்குரிய போர்க் குணம் குறைந்த அடிமை உழைப்பாளர்கள் என்ற நிலையே இவர்களிடம் மேலோங்கி இருந்தது. இதனால் இவர்களை தாழ்த்தி மதிப்பிடுவதாக யாரும் கருதிவிடக் கூடாது. உண்மைநிலை அப்படி இருந்தது என்பதுதான் இங்கு வலியுறுத்தப்படுகிறது. இதன் காரணமாகவே இவர்களால் நீண்ட நாட்கட்கு தம்மை ஒரு போராடும் இயல்புக்கு கொண்டுவருவது முடியாமல் இருந்தது.

1931 இற்குபின் முதலாவது சட்டசபை காலத்தில் இத்தோட்ட தொழிலாளருக்கு எதிரான கோசங்கள் வெளிப்பட்டன. தோட்ட தொழிலாளரை வெளியேற்றும் திர்மானத்தை தொழிற் சங்க முன்னோடி எனக் கருதப்படும் ஏ. ஈ. குணசிங்க கொண்டுவந்தார். இதனை அன்றைய சோஷலிச வாதிகளான என். எம். பெரேரா, பீலிப் குணவர்த்தன ஆகியோரும் ஆதரித்தனர். இந் நிலையில் தோட்ட தொழிலாளரை ஸ்தாபன, மயப்படுத்த முயன்றவர் நடேசையர் அவர்கள்.

இவரது "அகில இலங்கை உழைப்பாளர் சம்மேளனம்" 1931 இல் இருந்து 1933 வரைதான் நிலைத்தது. அதன் பின் தொண்டமான் தலைமையில் 1939 இல் இலங்கை இந்திய காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. 1940 இல் இலங்கை வந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேருதொண்டமானைச் சந்தித்து சில ஆலோசனைகளை வழங்கினர். நேருவின் ஆலோசனைப் படியே தொண்டமான் இயங்கினர். பின்னர் இவரது "இலங்கை இந்திய காங்கிரஸ், "இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்" ஆக மாறியதுடன் 1947 இல் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு 7 (ஏழு) ஆசனங்களைக் கைப்பற்றியது.

1947 தேர்தலில் இடது சாரிகளின் வெற்றிக்கும் தோட்டத் தொழிலாளர் காரணமாயிருந்தனர். இத்துடன் கண்டியில் நடைபெற்ற இடை தேர்தலில் யூ என்.பிக்கு எதிராகப் போட்டியிட்ட ரீ. பீ. இலங்கரத்தின வின் வெற்றிக்கு தோட்ட தொழிலாளர்களின் வாக்குகளே பெருமளவு காரணமாய் இருந்தன. தோட்ட தொழிலாளர் எப்போதும் சிங்கள தொழிலாளருடன் சேர்ந்து யூ, என். பிக்கு எதிராக நிற்பார்கள் என்பதை உணர்ந்த டீ.எஸ். சென நாயக்கா 48ம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்டம் கொண்டு வந்து தோட்ட தொழிலாளரின் பிராஜாவுரிமை, வாக்குரிமை இரண்டையும் இல்லாமல் செய்தார்.

இதற்கு உதவியாக இருந்தவர் திரு ஜீ. ஜீ. பொன்னம் பலம். இதன்பின் தோட்டத் தொழிலாளர் தேசிய வாழ் விலிருந்தே பிரிந்தவர்களாக இருந்தனர். ஜீ. ஜீ. இன் நட வடிக்கைகளை எதிர்த்து தமிழ் காங்கிரஸில் இருந்து வெளி யேறியோர் தமிழரசுக்கட்சியை தோற்றுவித்தாலும் தோட்டதொழிலாளரை அணிதிரட்டிப் போராடுவதில் அக் கறை காட்டவில்லை. இவர்களும் தமது அரசியலை பாராளு மன்ற அரசியலாக கொண்டிருந்தமையால் வாக்குரிமை யற்ற தொழிலாளரின் பக்கம் இவர்கள் கவனம் செல்ல வில்லை. பிரஜாஉரிமை சட்டத்திற்கு எதிராக தொண்ட மான் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்ததுடன் திருப்திப் பட்டுக் கொண்டார். இந்த அடையாள வேலைநிறுத்தத் துடன் தனது போராட்டத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்ட இவர், அதன் பின் தனது தொழிற்சங்க சந்தாப் பணம்சேர்க்கும் வியாபாரத்தை தொடர்ந்தார்.



பின்பு வந்த பல்வேறு தொழிற்சங்கங்களும் சந்தாப் பணம் சேர்ப்பதிலேயே அக்கறையாக இருந்தன. அவர்களை அணிதிரட்டி நடைமுறைப் பிரச்சனைகட்காகப் போராட வில்லை. 1963ற்கு பின் சண்முகதாசனின் செங்கொடிச் சங்கம் தோட்ட தொழிலாளரை அணிதிரட்டி பல போராட்டங்களை நடத்தினுலும் காலப்போக்கில் அவர்கள் சிதறுண்டு சீரழிந்து போயினர். செங்கொடி சங் கமும் இன்று சந்தா சேர்க்கும் ஒரு வியாபார நிறுவன மாகவே இருக்கின்றது. மலையகத்தில் உள்ள சகல தொழிற்சங்கங்களும் சந்தா சேர்க்கும் நிறுவனங்களாகவே மாறியுள்ளன.

1964ம் ஆண்டு ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டது. இது 3லட்சம் பேரை இலங்கைப் பிரஜை களாகவும் 5லட்சத்து 25 ஆயிரம் பேரை இந்தியப்பிரஜை களாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியது. பின் ஸ்ரீமா இந்திரா ஒப்பந்தம் 75,000 பேரை இலங்கைப் பிரஜை 75,000 பேரை இந்தியப் பிரஜை களாகவும் ஏற்றுக்கொண்டது. ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத் தின் பிரகாரம் இதுவரைக்கும் நாலு இலட்சம் பேரளவில் இந்தியா சென்றுள்ளனர். ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்த கால எல்லை 85ம் ஆண்டுவரை கூட்டப்பட்டுள்ளது.

உண்மையில் ஆரம்பத்தில் மலையக மக்களின் விருப்பத் திற்கு மாறாக அவர்கள் இரண்டு தலைமுறைகளாக உழைத்து உழைத்து ஓடாகிப்போன பின்னரும், இப்பூமி யில் சொந்தமற்றவர்களாக்கப்பட்டு உறவினர்களை குடும் பங்களை விட்டுப் பலவந்தமாக ஏற்றி அனுப்பப்பட்டார் கள். ஆயினும் அடிக்கடி ஏற்படும் கலவரங்களும் அதனல் ஏற்படும் நிம்மதியற்ற வாழ்க்கையும் அவர்களில் பெரும் பாலோரை இந்தியா செல்வதை விரும்பச் செய்துள்ளது. ஆயினும் இந்தியாசென்றபின்னும், அங்கே ஒரு நிச்சயமற்ற வாழ்க்கையே அவர்களுக்கு நிலவுகிறது. மலையகத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழரை அப்புறப்படுத்தும் நோக்கில் அரச ஒடுக்குமுறை கள் அவர்கள் மீது பல வடிவங்களில் செய்யப்படுகின்றன.

கடந்த அரசாங்கத்தின் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைத் தொடர்ந்து அன்றைய காணி அமைச்சர் கொப்பேகடுவ வால் பல தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்டு அந்நிலங்கள் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்துளிக்கப்பட்டன. அப்போது தொழிலாளர்கள் தோட்டங்களை விட்டுத் துரத்தப்பட் டனர். வீதிக்கு விடப்பட்ட தொழிலாளரில் பலர் கிழக்கு மாகாணத்தில் புனானை போன்ற பகுதிகளில் காடுகளில் குடியேறியவுடன் ஆயுதப்படையினர் வீடுகளைக் கொளுத்தி அங்கிருந்து துரத்தினர். சிங்கள மக்களுக்கு நிலங்களைப் பகிர்ந்தளிக்கும் போது இலங்கைப்பிரஜா உரிமை பெற்றவர் களுக்கும் கூட நிலங்கள் வழங்கப்படவில்லை என்பது கவனிக் கத்தக்கது.

1977 இனக்கலவரம் மலையக மக்களை மிகவும் மோச மாக பாதித்தது. பலர் படுகொலை செய்யப்பட்டனர். உயி ருடன் கொளுத்தப்பட்டனர். பலர் கற்பழிக்கப்பட்டனர். துல்கிரியா நெசவு ஆலையில் வேலை செய்த சிங்களத் தொழிலாளரே தோட்டங்களில் புகுந்து காடைத்தனம் செய்தனர். இந்நிலையில் எப்படி தோட்டதொழிலாளர்கள் சேர்ந்து வாழ்வதில் நம்பிக்கை கொள்ள முடியும். இலங் கைப்பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்தவர்கள் கூட இந்தியா செல்ல விருப்பம் தெரிவித்தனர்.

ஆனால் இந்திய அரசு ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தத் திற்கும், இந்திரா—ஸ்ரீமா ஒப்பந்தத்திற்கும் உள்ளான 6 இலட்சம் பேரைத்தவிர எந்த ஒருவரையும் ஏற்காது என அறிவித்தது. இந்நிலையில் பலர்—வடக்கு—கிழக்குக்கு வந்து குடியேறினர். காந்தீயம் போன்ற சமூகசேவை நிறுவனங்கள் இந் நடவடிக்கைகளை முன்னின்று செய்தன. அப்படிக் குடி யேறியவர்களுக்கு ஆயுதப்படைகள் வேறு வடிவங்களில்



கஷ்டங்களை கொடுத்தனர். அண்மையில் பன்குளத்தில் பல குடிசைகள் எரிக்கப்பட்டு துரத்தப்பட்டனர்.

1983 யூலையில் நடந்த இனக்கலவரத்திலும் பாதிக்கப் பட்டனர். இந்தியா செல்ல விரும்பும் சகலரையும் இந்தியா ஏற்கவேண்டும் எனும் கருத்தை தொண்டமான் சொல்ல தொடங்கியுள்ளார். தொண்டமான் எந்த யூ. என் பியின் காலை நக்கினாரோ அக்காலாலேயே உதை வாங்கிய பரிதாப நிலைக்கு உள்ளானார். இந்நிலையில் மலையகமக்கள் தம் முடிவைத்தாமே தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

பதிவுப்பிரஜை, வம்சாவழிப் பிரஜை என்ற வேறு பாட்டை நீக்கிவிட்டதாக அரசு அறிவித்தாலும் கூட நடை முறையில் பதிவுப்பிரஜைகள் பல்வேறு நிர்வாக அலுவல் களில் கஷ்டங்களை எதிர் நோக்குவதுடன் வேறுபாடும் காட்டப்படுகின்றனர்.

வரலாற்று சமூக கலாச்சார வேறுபாடுகள் காரணமாக மலையக மக்கள் வடகிழக்கில் வாழும் தமிழரிலிருந்து வேறு பட்ட தனித்துவமான அம்சங்களை கொண்டவர்களாகவே இருக்கின்றனர். இவர்களது தனித்துவத்தை நாம் அங்கீ கரிக்க வேண்டும்.

மலையக மக்களை ஒரு தனியான தேசிய இனமாக கருதும் போக்கும் இங்கு மலையக படித்த புத்திஜீவிகளால் முன்வைக்கப்படுகிறது. தேசிய இனம் என்றால் என்ன என்ற தெளிவின்மையும் சில சந்தர்ப்பவாத அரசியல் நோக்கங் களும் காரணமாகவே இக் கருத்துஎழுந்துள்ளது. இது பரந்துபட்ட மலையக மக்களின் கோஷமாக வெளிவரவில்லை. தேசிய இனப்பிரச்சனை பற்றி நாம் பிறிதோரிடத்தில் ஆராய்வதால் அதை இங்கே சொல்ல வேண்டியதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1948 பிரஜா உரிமைச் சட்டம், 1964 ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தம், பின்னைய் இந்திரா—ஸ்ரீமா ஒப்பந்தம் என்பவை மலையகத் தமிழர்களை ஒரு தேசிய இனமாக வளரவிடவில்லை. இவர்கள் வாழ்க்கை மலையகத்தில் நீடிப்பது பற்றிய சந்தேகத்துடனேயே வாழ வேண்டியிருந்ததால் ஓர் தேசிய இனத்திற்கான நிலப்படிமானம் (நிலத்துடனான பிணைப்பு) கூட இவர்களிடம் ஏற்பட முடியாது போயிற்று.

ஆயினும் இலங்கையில் தமிழின மக்கள் மீது கட்ட விழ்த்துவிடப்பட்டிருக்கும் தேசிய ஒடுக்கு முறையின் சகல பாதிப்புக்களையும் மலையக தமிழர்களும் அனுபவித்து வரு கிறார்கள். இவர்கட்கு முற்றாக இலங்கையில் வெறுப்பூட்டி, இந்தியாவுக்கே கலைக்கும் நோக்குடன் அரசு செயல்பட்டு வருகிறது.



## தமிழ் மாணவர் பேரவையும் அதன் பின்னான இயக்கங்களும்

தமிழ் மக்கள் தமது தேசிய விடுதலைக்காக போராடும் இந்நேரத்தில் இவ் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கினை வகிக்கும் இளைஞர் இயக்கங்கள் பற்றி ஒரு தெளி வான கண்ணோட்டத்தை பெறுவதும் அவற்றின் நிலைப் பாடுகள் பற்றி விளங்கிக்கொள்வதும் விடுதலைப் போராட் டத்தில் ஒரு தெளிவான பாதையை வகுத்து கொள் வதற்கு வாய்ப்பளிக்கும். இன்றைய இந்த இளைஞர் இயக்கங்களின் தோற்றுவாய் ஆகவும் இவ் இளைஞர் இயக் கத்தின் நிலைப்பாட்டுக்கும் குணம்சத்துக்கும் காரணமாக அமைந்தது தமிழ் மாணவர் பேரவையே. எனவே தமிழ் மாணவர் பேரவையின் தோற்றம், வளர்ச்சி, அதன் நட வடிக்கைகள், சிதைவு என்பனபற்றியும் அதற்கான கார ணங்கள் பற்றியும் ஆய்வு செய்வது இவ் இளைஞர் இயக்கங் களைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

1970ம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாசக் கட்சி, இலங்கை கம்யூனிஸ் கட்சி ஆகியன அடங்கிய கூட்டு முன்னணி அரசு தமிழ் இளைஞர்களின் உயர் கல்விக்கு ஆப்பு வைக்கும் நோக்குடன் தரப்படுத்தல் முறையை அமுலுக்குக் கொண்டுவந்தது. இவ் ஆண்டு பல்கலைக் கழக அனுமதியிலே புள்ளித் திரட்டு (Aggregate) முறை பயன்படுத்தப்பட்டபோது கூடுதல் தமிழ்மாணவர் தெரிவாகினர். இதற்கு எதிராக சிங்கள பௌத்த இன வெறி நிறுவனங்கள் குரல் எழுப்பின. இக் குரல் எழுப் பலுக்கு செவிசாய்த்த அரசு தரப்படுத்தலை கொண்டு வந்தது. அரசினால் கொண்டுவரப்பட்ட இம் மாற்றம் தமிழ் மாணவர்களை பெரிதும் பாதித்தது. இதற்கெதிராக கொதித்தெழுந்த தமிழ் மாணவர்கள் தமது எதிர்ப்புணர்வை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிக்காட்ட 'தமிழ் மாணவர் பேரவை' என்ற அமைப்பை உருவாக்கி யாழ்ப்பாணத்தில் மாபெரும் ஊர் வலத்தை நடத்தினர். தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கான ஒரே வழியான கல்வியில் கை வைக்கப்பட்டதால் மாணவர்கள் கொதிப்புற்றதும் தன்னெழுச்சியாக போராடக் குதித்ததும் தவிர்க்க முடியாததே. முக்கியமாக தமிழ் மக்களின் அரசியல் தலைமையானது யாழ்ப்பாண மத்தியதர புத்திஜீவிகளையே பிரதானமாகக்கொண்டிருந்ததால் முன்பு மலையகதமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோதும், சிங்கள குடியேற்றம் போன்றவற்றிற்கும் காட்டப்படாத எதிர்ப்பு இதற்குக் காட்டப்பட்டது.

இதுவரை காலமும், தமிழ் தலைவர்களின் சிங்கள அரசுடனான பல்வேறு ஒப்பந்தங்கள், பேச்சு வார்த்தைகள் எல்லாம் பயனற்று தட்டிக் கழிக்கப்பட்டு வந்ததால் தமிழ் மக்கள் பிரிந்து போவதை தவிர வேறு வழி இல்லை என்ற முடிவிற்கு தமிழ் மாணவர் பேரவையினர் வந்தனர். 70 இற்கு முன்பே சி. சுந்தரலிங்கம், சுயாட்சிக்கழக நவரத்தினம் ஆகியோரால் தனிநாட்டு கோரிக்கை முன் வைக்கப்பட்ட போதும் 1970 இலே அது தமிழ் மாணவர் பேரவையினால் முன்வைக்கப்பட்ட போதே அது வெகு ஜன அபிப்பிராயத்தை பெற்றது. யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்தினரின் அரசியல் பங்கும் "பங்களா தேஷ்' பிரிவினைப் போராட்டமும் இக்கோரிக்கைகள் பிரபல்யம் அடைய காரணங்களாயின. அக்காலத்தின் சமூக சூழல், காலத்தின் தேவை ஆகியவற்றை கணக்கில் எடுத்து இக் கோரிக்கை அப்போது முன்வைக்கப்படவில்லை. சமூக கண்ணோட்டம் அற்று வெறும்சுயவிருப்பின் அடிப்படையிலேயே இக் கோரிக்கை அப்போது முன்வைக்கப்பட்டது. குறிப்பாக யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்தினரின் தேவையாகவே இது இருந்ததால் இதற்கு யாழ்ப்பாணத்தில் நல்ல ஆதரவும் கிடைத்தது. தமிழ் மாணவர் பேரவை விடுதலைக்கு அவசியமான நீண்ட கால கண்ணோட்டத்துடனான வேலைத்திட்டம் இன்மையால் இவர்களது தன்



னெழுச்சியான போராட்டங்களில் இருந்து படிப்பினைகளைப் பெற்று அமைப்பை கட்டி எழுப்பும் தன்மை இவர்களிடம் காணப்படவில்லை. பொதுவாகவே மாணவர்கள் வேகமாக போராட வருவதும் அதுபோலவே பின்னடைவதும் இயல்பானதாகும். சரியான வேலைத்திட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக வழி காட்டப்பட்டால் மட்டுமே மாணவர்களை அமைப்பில் நீடித்து வைத்திருக்க முடியும். இக் காரணத்தால் காலப்போக்கில் இம் மாணவர் பேரவை சிதைந்து போக உதிரியாக சிவகுமாரன் போன்ற சிலரும் உதிரியான குழுக்களும் சரியான வழிகாட்டல் இன்றி வீரசாகசச் செயல்களில் ஈடுபட்டனர். தமிழ் இளைஞர்கட்கு ஆயுதப் போராட்ட பாதையை காட்டிய வரலாற்று பாத்திரம் சிவகுமாரனுக்கு உண்டு. மற்றொரு பகுதியினர் கூட்டணியின் பின்னால் இளைஞர் பேரவை ஆகித் தொடர்ந்தனர்.

இளைஞர்களிடையே தனிநாட்டுக் கோஷம் வளர்ச்சி அடைந்து வருவதைக் கண்ட தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, தொண்டமான் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் சேர்ந்து கூட்டணியை அமைத்தனர். இவ் விடுதலைக் கூட்டணி 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை' 'தமிழன் இல்லா நாடில்லை தமிழனுக்கென்றோர் நாடில்லை' என்றெல்லாம் தமது பிற்போக்கு நலன்களைப் பேண பிதற்றித் திரிந்தது. திட்டம் ஏதும் அற்று தமது 'போராட்ட மேடைகளில்' எல்லாம் தமிழீழப் போராட்டத்தையும் பங்களா தேஷ் போராட்டத்தையும் ஒப்பிட்டுப் பேசி இளைஞர்களை வெற்றுணர்ச்சி வெறியூட்டினர். இவ்வாறு உணர்ச்சியூட்டப்பட்ட இளைஞர்கட்கு சிங்கள இளைஞர்களின் 1971ம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சி ஆயுதப் போராட்டம் பற்றிய கண்ணோட்டத்தை கொடுத்தது. இந்த இளைஞர்கள் பஸ் எரிப்பு என்று தொடங்கி துரோகிகள் ஒழிப்பு, போலீஸ் அதிகாரிகளை அழித்தல் எனத் தொடர்ந்தனர். இவ் வகையான நடவடிக்கைகளில் ஈடுபட்ட இளைஞர்கள் போலீசாரால் தேடப்பட்டபோது தலைமறைவாகினர். மக்களோடு நெருக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மின்றி செயல்பட்டு வந்த இவர்கள் இதனால் மேலும் அன்னியமாகிப் போனார்கள். இந்த அன்னியமாகிப் போன தன்மை தவிர்க்க முடியாதவாறு இவர்களை தங்கள் பணத் தேவைக்காக வங்கிக் கொள்ளை முயற்சிகளில் ஈடுபடுத்திற்று.

தமிழ் மாணவர் பேரவை சிதைவுற்றபின் அதிலிருந்த சிலரால் 1973இல் இருந்து தங்கதுரை தலைமையில் ஓர் குழு உருவாக்கப்பட்டபோதிலும் அதன் செயற்பாடுகள் 1976இன் பின்பகுதியில் இருந்து ஆரம்பமானது. ஆயினும் இதற்கென்று திட்டவட்டமான அரசியற் கொள்கையோ அரசியல் அமைப்போ இருக்கவில்லை. இவர்களும் துரோகிகள் ஒழிப்பு, பொலிஸ் அதிகாரிகள் அழிப்பு என்று தமது செயல்களை நடாத்தினர். இக்குழுவே பின் தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) ஆக உருவெடுத்தது, தலைவர் தங்கதுரையின அண்மை கால நீதிமன்ற உரை இவர்கள் மக்கள் போராட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளதையும் சொந்த பலத்தில் தங்கி நின்று போராடுவதையும் வலியுறுத்துகின்றது, ஆயினும் இந்த வளர்ச்சி நிலை எவ்வளவு தூரம் இருக்கிறதென்பதையோ இவர்களது அரசியல் பாதையையோ இவர்கள் திட்டவட்டமாக முன் வைக்கவில்லை.

கூட்டணியின் மிதவாதப் போக்கிலே ஏற்பட்ட அதிருப்தி காரணமாக இளைஞர் பேரவையில் இருந்து பிரிந்த சில இளைஞர்கள் ஈழ விடுதலை இயக்கம் என்ற அமைப்பை 1974 இன நடுப்பகுதியில் தொடங்கினர். இவர்கள் பகிரங்கமாக கூட்டணித் தலைமையை நிராகரித்து அதை பிற்போக்கு தலைமையென கண்டித்தனர். சோசலிச தமிழீழம் என்ற கருத்தை முன்வைத்தனர். நீண்ட கால கண்ணோட்டத்துடன்கூடிய வேலைத்திட்டம் இன்மையாலும் கூட்டணியின் ஊடுருவலாலும் இவ் இயக்கம் அழிந்து போயிற்று. இவர்களது பிரச்சாரங்கள் இளைஞர்கட்கு ஓரளவு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த உதவின.

1974 இல் பொலிசாரால் தேடப்பட்டபோது தலை மறைவான சிலர் சேர்ந்து 'புதிய தமிழ்ப் புலிகள்' என்ற



பெயரில் இயக்கமொன்றை ஆரம்பித்தனர். பல உணர்ச்சியுள்ள வீரசாகச விருப்பமுள்ள இளைஞர்கள் இப் புதிய தமிழ் புலிகள் (T.N.T.) இயக்கத்தில் சேர்ந்து 1976 இல் ''தமிழீழ விடுதலைப் புலிகள், என்ற புதிய இயக்கப் பெயருடன் இயங்க ஆரம்பித்தனர். இவர்களும் துரோகிகளை ஒழித்தல், வங்கிக் கொள்ளை மற்றும் இராணுவ நடவடிக்கைகளை வெற்றிகரமாக செய்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் இவ் ஆயுத நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் ஆயுதப் போராட்டம் பற்றிய நம்பிக்கை, உருவாக்க உதவிற்று. இவற்றை கட்டுப்படுத்த முடியாத சிங்கள இனவெறி அரசு 1979 இல் அவசரகாலச் சட்டத்தை பிரகடனம் செய்து இன்பம், செல்வம் போன்ற பல இளைஞர்களைப் 'பகிரங்கமாகக் கொன்று போட்டது. இக்கட்டத்தில் இங்கு தாக்குப்பிடிக்க முடியாத பல தீவிர இளைஞர்கள் இந்தியாவிற்குத் தப்பிச் சென்றனர். இந்தியாவில் பலரிடையே அனுபவ ரீதியாக தமது பழைய நடவடிக்கையினால் மட்டும் விடுதலையை கொண்டுவர முடியாது எனும் கருத்து வெளியிடப்பட்டது. பழைய சுத்த ராணுவப் பாதையை கைவிட்டு மக்கள் இயக்கப் பாதையை முன்னெடுக்க வேண்டுமென பலரும் கருத்து முன்வைத்தனர். இக் கருத்து வேற்றுமைகள் கூர்மையடைந்து இவ் இயக்கம் இரண்டாகப் பிரிந்தது. பிரிந்த பகுதியினர் வெளியேறி 1980 இல் தனி இயக்கமாக செயல்பட ஆரம்பித்தனர். இவர்கள் 'புதியபாதை' எனும் பத்திரிகையை வெளியிட்டனர். அதில் தேவையற்ற இராணுவ நடவடிக்கைகளை நிராகரித்து மக்கள் இயக்கத்தை வலியுறுத்தியதுடன் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஓர் தேசிய விடுதலைப் போராட்டமே எனும் கருத்தையும் முன்வைத்தனர். இவர்கள் தமிழீழ மக்கள் விடுதலை கழகம் என்ற பெயரில் 1980 நடுப்பகுதியில் இருந்து செயல்பட ஆரம்பித்தனர். ஆயினும் இவர்களால் எழுதிய அதே வழியில் செயல்பட முடியவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அதிருப்தி அடைந்த பலரும் இதில் இருந்தனர். பெரும்பாலானோர் தெளிவான கொள்கையை கொண்டிருக்கவில்லை. ஒழுங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கான ஸ்தாபன அமைப்பின்மையும், பழைய இயக்கத்தின் நடைமுறையில் பழக்கப்பட்ட தன்மையும் இவர்களை ஏட்டிக்குப் போட்டியாக இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட வைத்தது. இவர்கள் மக்கள் இயக்கத்தைக் கட்டவும் விரும்பினர், பழையநடவடிக்கைகளையும் விரும்பினர். இதனால் தெளிவற்ற குழப்பமான வேலைகளில் ஈடுபட்டனர். வெகுசன அமைப்புகட்கும், தலைமறைவான அமைப்பிற்கும் இடையிலான உறவை கையாள்வதில் அனுபவமின்மையாலும், தவறுகக் கையாளப்பட்டதாலும் காந்தியம் போன்ற அமைப்புகள் அழிக்கப்பட காரணமாயிற்று.

பொதுவாக தமிழீழ விடுதலைப்புலிகளில் ஆரம்பகாலங்களில் காணப்பட்ட போக்கானது தனிநபர்களை அழிக்கும் போக்கான (தனிநபர்பயங்கரவாதப் போககாக) இருந்தது. தனிநபர்களை அழிப்பதன மூலம விடுதலைப்போராட்டத்தை முன்னெடுககமுடியும் என நம்பி காலப் போக்கில் இந்தப் போககு மாற்றமடைநதது. அதாவது தனிநபர் பயங்கரவாதப் போககிலிருந்து ஒரு நகர்புற கொரில்லா தாக்குதல் நிலைக்கு இவர்கள் நடவடிககைகள் வளர்ச்சியடைந்துள்ளன. ஆனைக்கோட்டை போலீஸ்நிலையத் தாக்குதல், சாவகச்சேரி போலீஸ்நிலையத்தாக்குதல் திருநேல்வேலியில் 13 இராணுவ வீரர்கள் அழிக்கப் பட்டமை என்பன இராணுவ ரீதியில் வெற்றிகரமான தாக்குதலாகும். ஆயினும் மையநிர்வாகத்துககுட்படாத நகர்புற கொரில்லா தாக்குதல்கள் மக்கள் மத்தியில் தயாரிப்பு வேலைகள் செய்யப்படாத நிலையில் மேறகொள்ளப்படும் போது போராட்டம் தனது போக்கில் வளர்ச்சியுறுவதறகுப் பதில் மிகுந்த பாதிப்புக்குள்ளாகிறது. இதனால் உண்மையான விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு இந் நடவடிக்கைகள் இடையூறாக அமைகின்றன. இவை காலத்திற்கு முந்தியவையாக அமைந்தன.

முன்பு ஈழவிடுதலை இயக்கத்தில் இருந்த சிலரும் வேறு சிலரும் சேர்ந்து லண்டனில் ஈழப்புரட்சிகர அமைப்பாளர்கள் (EROS) எனும் இயக்கத்தை 1976ல் ஆரம்பித்தனர். இவர்கள் இங்குள்ள சமூக பொருளாதார சூழலை கணக்கில்



எடுக்காது தமது சுயவிருப்பின்படியே சோசலிச ஈழம் என்ற கருத்தைமுன்வைத்தனர். மலையகமக்களின் தனித்துவத்தை கருத்திற் கொள்ளாது மலையக தமிழரையும் இணைக்கும் முகமாக பதுளை சேர்ந்த ஈழம் என்று கூறினர். பதுளைக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் இடையில் உள்ள சிங்களப் பிரதேசங்களில் உள்ள சிங்களமக்கள் ஹற்றனுக்கும் ஹற்றனில் உள்ள மலையக மக்கள் இப்பிரதேசத்துக்கும் புலம் பெயர வேண்டுமென றனர். இது நடைமுறை சாத்தியமற்றது. சிங்கள மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பறிப்பது ஆகாதா? இவர்களது மாணவர் அமைப்பாக ஈழமாணவர் பொதுமன்றம் (GUES) செயல்பட்டுவந்தது. EROS அன்னிய உதவியில் நம்பிக்கை வைத்ததுடன் வல்லரசுகளின் தலையீட்டையும் நம்பியது. நாளாந்தம் மக்கள் போராட்டங்களை நிராகரித்து திடீர் எழுச்சியை வலியுறுத்தினர். அடிப்படையில் சோசலிசம் பற்றி வரட்டுத்தனமான கொள்கைகளை கொண்டுள்ளனர்.

நடைமுறை முரண்பாடுகள் காரணமாக 1980ல் GUES பிரிந்து தனியாகப் போயிற்று GUES தனது அமைப்பை ஈழமக்கள புரட்சிகர விடுதலை முன்னணி (E.P.R.L.F.) எனவும், GUES அதன் மாணவர் அமைப்பு எனவும் பிரகடனப் படுத்தியது. இவர்கள் இன்றைய போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டம் என்ற போதிலும் அதற்கான அவர்களது வேலைத்திட்டம் குழப்பமாகவே உள்ளது. EROS முன்வைத்த அதே ஈழத்தையே முன்வைக்கின்றனர். அன்னிய உதவியை பற்றிய விடயத்தில் இவர்கள் தெளிவான கருத்தை முனவைக்கவில்லை. இவர்கள் மக்களை அரசியல் மயப்படுத்தி நாளாந்த சிறு சிறு போராட்டங்களை செய்து வந்துள்ளதையும், அரசியல் பிரச்சாரங்களினூடாக இளைஞர்கட்கு அரசியல் விழிப்புணர்வையும், மக்களுக்கு கூட்டணி பற்றிய தெளிவையும் கொடுத்ததை மறுக்க முடியாது.

தமிழீழவிடுதலை இயக்கத்தில் இருந்து பிரிந்து உருவான 'தமிழீழவிடுதலை இராணுவம்' என்ற புதிய இயக்கமும்தனது வேலைத்திட்டம் இன்மை காரணமாக சிறுபிள்ளைத்தனமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டுள்ளது. உறுதியான சில கருத்துக்கள் வெளியிட்டிருந்தினராயினும் தமது கொள்கைகளை தெளிவாக இவர்களும் முன் வைக்கவில்லை.

இடதுசாரி இயக்கங்களின் சந்தர்ப்பவாதப் போக்கால் அதிருப்தியுற்ற சிலரால் தொடங்கப்பட்ட தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி, 1980இற்கு பின் மக்கள் மத்தியில் வேலைசெய்ய ஆரம்பித்தது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, தேசிய விடுதலைப் போராட்டம் என்ற கொள்கைகளை முன்வைத்த போதும் தீர்வு பற்றிய திட்டவட்டமான முடிவை கொண்டிருக்காமையால் ஓர் குழப்பநிலை காணப்பட்டது. மேலும் தேசிய இனம் பற்றிய கோட்பாடு போராட்டப்பாதை, அமையப்போகும் அரசு, மலையக மக்கள் பிரச்சனை என்பன பற்றி தெளிவாக வரையறுக்கப் படவில்லை. தெளிவான வேலைத்திட்டம் இன்மையால் நாளாந்தப் போக்குகளுக்கு இழுபட்டுப் போகும் தன்மையும், மக்களிற்கு வழிகாட்ட வேண்டியவர்கள் மக்களின் பின்னால் சென்றமையும் இதன் குறைபாடுகளாகும்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் போக்கால் அதிருப்தியுற்றவர்களால் 1981இல் தமிழீழ விடுதலை அணி உருவாக்கப்பட்டது. இவர்கள் வெறும் பிரச்சாரத்தை செய்தனரே தவிர இவர்களிடம் ஒழுங்கான வேலைத்திட்டம் இருக்கவில்லை. இவர்களது போராட்டம் அகிம்சை வழியா அல்லது ஆயுதப் போராட்டமா என்று தெளிவாக வைக்கவில்லை.

மொத்தத்தில் இவ் இயக்கங்கள் யாவும் குறிபிட்ட வயதுள்ள படித்த இளைஞர்களை கொண்டுள்ளதாகவே உள்ளன. இவ் இயக்கங்களின் கடந்தகால நடவடிக்கைகள் இந்த இளைஞர்களின் மத்திய தரவர்க்க சிந்தனைப் போக்கை வெளிக்காட்டுவதாகவே உள்ளது. மக்களில் இருந்து அன்னியப்பட்ட நிலைகளில் குறிப்பிட்ட காலத்தின் தேவை சமூக பொருளாதார சூழ்நிலை, மக்களின் மனநிலை ஆகியவற்றை கணக்கில் எடுக்காது தம் மனப்போக்கிலேயே



செயல்பட்டனர். இவர்களால் மக்களை அரசியல் மையப் படுத்தி விழிப்புணர்வு பெறச்செய்து அணிதிரட்ட முடியவில்லை. பதிலாக வீரதீர செயல்களில் நம்பிக்கை கொண்ட பல இளைஞர்களே இவ் இயக்கங்களிலும் ஈடுபட்டனர். இதனால்மக்கள் பார்வையாளர்களாகவே வைக்கப்பட்டனர். இளைஞர்களிடையே காணப்பட்ட மத்தியதர வர்க்கப் போக்கின் காரணமாக குழுவாதிகளாக தம் முள் முடங்கி போயினர்.

பரவலான மக்கள் அமைப்பைக் கட்டுவதில் அக்கறையின்மையும், அதனால் ஏற்படும் சிறிய கஷ்டங்களுக்கு சலிப்படையும் மனப்பான்மையும் கொண்டிருக்கும் குழு மனப்பான்மை வேருன்றியதன் காரணமாக ஸ்தாபனத் தன்மை அற்று தனிமனிதசாகச கவர்ச்சிகளினாலேயே அங்கத்தவர் சேர்க்கப்பட்டனர், சேர்ந்தனர். நீண்டகால கண்ணோட்டம் தெளிவான அரசியல் பார்வை ஆகியன இல்லாத காரணத்தால் திடீர் முடிவுகளையும், உடனடி நடவடிக்கைகளையும் நம்புகின்ற தன்மையும் காணப்படுகின்றது. இத்தகைய நடவடிக்கையின் மூலமாக எதிரி பலவீனமாக உள்ள வேளைகளில் மட்டுமே சில வேளைகளில் வெற்றி கிட்டலாம். இவ் வெற்றிகளும் தற்காலிகவெற்றிகளாகவே இருக்கும். மத்திய தரவர்க்க போக்கின் காரணமாக எதிரியைப் பற்றி தவறான மதிப்பீட்டிலும், குருட்டு அதிஷ்டத்திலும் நம்பிக்கை வைத்தே இவர்களின் போராட்டங்கள் அமைந்துள்ளன. எனவே இவைகள் நிச்சயமற்ற போராட்டங்களாகும்,

அண்மைக்காலங்களில் "சேகுவராவின் தத்துவம்" "கொரில்லாயுத்தம்" என்பன சில இளைஞர் இயக்கங்களிடையே பிரபல்யம் அடைந்துள்ளன. இவ் இயக்கங்கள் இவற்றை எவ்வித சமூக ஆய்வோ அரசியல் நோக்கோ இன்றி யாந்திரிகமாகப் பிரயோகிக்கின்றனர். இவர்கள் கொரில்லா போராட்ட நடவடிக்கைகள் ஆயுதமேந்திய மக்கள் போராட்டத்தின் ஒரு போராட்ட நடைமுறையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதை உணரமறுத்து கொரில்லா போராட்டமே ஆயுத மேந்திய மக்கள் போராட்டம் என்கிறார்கள். சிலர் இன்னும் ஒரு படி மேலே சென்று கொரில்லாக்களே எல்லாமும் (அரசியல், ஸ்தாபனம், இராணுவம், வெகுஜன ஸ்தாபனங்கள்) என்கின்றனர். அதாவது கொரில்லாக்கள் அரசியல் ஸ்தாபனங்களின் மீது ஆதிக்கம் செலுத்துவது பற்றியும் கூறுகின்றனர். இது மோசமான கருத்து ஆகும். இவர்களில் சிலர் தற்காலத்தில் சேகுவராவின் தத்துவம் என்று "ரெயிஸ்டெப்ரே"யினுல் முன்வைதத குவியத் தேற்றத்தை (FOCO THEORY) தமது நடவடிக்கைகளுக்கு இசைவாக கூறுகின்றனர். அதாவது ஒடுக்கு முறையிலே விழிப்படைகின்ற குழுவினர் அரசுக்கெதிரான நடவடிக்கை களில் ஈடுபடும்போது அரச ஒடுக்குமுறை மேலும் அதிகரிக் கும், அதன் மூலம் புரட்சிக்கானசூழல் உருவாக்குதல் ஆகும். அதாவது ஒடுக்குமுறையானது உச்சகட்டத்தை அடையும் போது மக்கள் தன்னெழுச்சியாக அதற்கெதிராக போராடு வார்கள் என்பது இவர்களது நம்பிக்கை. ஆனுல் தன்னெழுச் சியான போராட்டத்திற்கு குதிக்கின்ற மக்களை வழிகாட்ட வும், நெறிப்படுத்தப்பட்ட போராட்டத்தில் ஈடுபடுத்தவும் இக்குழுக்கள் அக்கறைஎடுப்பதில்லை. அன்றியும்புரட்சிக்குவி யத்தை உருவாக்குவது என்பது மக்களது விருப்பத்துககு முரணுன தீர்வொழுங்கு முறை அதாவது மக்கள் விரும்பாத போதே போராட்டம் ஒன்றை உருவாக்கி அவர்கள் மீது அதை திணிப்பது போன றதாகும். புறச்சூழல் சாதகமாகவே உள்ளது. அகநிலையான சக்திகளை வளர்பபதே நாம் செய்ய வேண்டிய வேலையாகும்.

உண்மையில் சரியாக தயார்படுத்தப்படாத நிலையில் நடாத்தப்படும் இந்நடவடிக்கைகள் மககளை அனுவசியமாக பலி கொள்வதற்கும் எந்த மக்களுக்காக இவர்கள் செய்வ தாக நினைத்து செய்கிறார்களோ அந்த மக்களிடமே அதி ருப்தியையும் பெறவே செய்யும். சேகுவேராவின் இம் முறையில் வெற்றி அடைந்ததற்கான காரணத்தையோ



இங்கு அதற்கு அப்படி சூழல் வாய்ப்பு இல்லை என்பதையோ இவர்கள் கருதிப்பார்ப்பதில்லை,

கியூபாவில் மக்களின் வெறுப்புக்குள்ளான ஒரு இராணுவ ஆட்சியே அன்று இருந்தது, அந்த அரசின் இராணுவ வீரர்கள்கூட வெறுப்பு அடைந்து இருந்தனர். இந்நிலையில் போராடி ஆட்சியை கைப்பற்றுவது மட்டுமே இவர்களுக்கு போதுமானதாக இருந்தது. அங்குள்ள இராணுவத்தினரும் போர் முடிவில் இவர்களுடன் சேர்ந்து கொண்டனர். ஆனுல் எமது நிலைமை வித்தியாசமானது. வெறும் அரசு அதிகாரத்தை உடைப்பது மட்டுமல்ல, அதன் பின்னுன ஒரு அரசை உருவாக்குவதும் எமது பணியாகும். எனவே குறிப்பிட்ட சில சூழல்களில் மட்டுமே பொருந்தக் கூடிய போராட்ட முறையானது எல்லா இடமும் பொருத் தமற்றதாகும். அன்றியும் பொருத்தமற்ற நடவடிக்கைகள் குழுக்களின் போராட்டங்களிலேயே நம்பிக்கை கொண்டி ருப்பதால் பெறப்பட்ட விடுதலையை தொடர்ந்து பேணு வதில் அதை இறுதிவரை பாதுகாப்பதில் ஏற்படும் நடை முறை சிக்கல்களால் திரும்பவும் பாசிச நடைமுறைக்கே இட்டுச்செல்லும்.

இளைஞர் இயக்கங்களினது மேற்கூறிய பல குணும்சங் களுககும் சுத்த ராணுவக் கண்ணேட்டமே காரணமாகும் அதாவது சரியான அரசியல் கண்ணேட்டம் வகுக்கப் படாமல் மக்களை அரசியலில் பங்கு பற்ற வைக்கும் அரசியல் மார்க்கத்தை முதன்மைப்படுத்தாமல் இராணுவ நடவடிக்கைகளையே முதன்மையாகக் கருதும் போக் கையே சுத்த இராணுவக் கண்ணேட்டம் எனகிறேம். சரியான அரசியல் கண்ணேட்டமின்றி நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் எதிரியைப் பலப்படுத்தி அவ னுக்கு சாதகமாய் அமைந்ததோடு விடுதலைப் போராட்டத் திற்கான சரியான தயாரிப்புகளை ஏற்படுத்துவதற்குப் பாதிப்பை கொடுத்தது. பல நடவடிக்கைகள் எதிரிக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்படுத்திய பாதிப்பை விடவும் மக்களுக்கு பாரிய அழிவைக் கொடுத்தது. 1981 இல் நாச்சிமார் கோவில் சம்பவத்தை அடுத்து யாழ் நகரமும், பண்பாட்டு கொலை யான பொதுசன நூலக எரிப்பும் நடைபெற்றது. வவுனி யாச் சம்பவத்தை அடுத்து வவுனியா எரிக்கப்பட்டதுடன் பன்குளம் திருகோண மலைப் பகுதிகளில் திட்டமிட்ட இனப் படுகொலைகள், அழித்தொழிப்புகள் முடுக்கிவிடப்பட்டன. இவை இன்னும் முடியவில்லை. திருநெல்வேலி சம்பவத்தை அடுத்து நாடு முழுவதும் பரந்த இனக்கலவரமும் திட்ட மிட்டு நடத்தப்பட்டது. உடமைகள் சூறையாடப்பட்டன உயிர்கள் பலி கொள்ளப்பட்டன.

அரசியல் மார்க்கத்தை முன்னெடுக்காது ஸ்தாபன வேலையை புறக்கணித்ததாலேயே 1977 இல் யாழ்பாணத் தில் அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது பெரும்பாலான போராளிகளும் இந்தியாவுக்கு தப்பிப் போகும் நிலை ஏற்பட்டது. சுத்த இராணுவக் கண்ணோட் டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதால் ஸ்தாபன வேலைகளில் ஜனநாயக மத்தியத்துவம்பேணப்பட வில்லை. விமர்சனம், சுயவிமர்சனம் என்பன கைக்கொள்ளப் படாததால் சதி, நேரேபேசாதுமுதுகுக்குப்பின்னே பேசுவது போன்ற நடவடிக்கைகளை பலரும் உருவாக்கினர். இதனால் குழு வாதங்கள் தோன்றின. இயக்கங்களிடையே நேச முரண்பாடு எதிர் முரண்பாடாககையாளப்பட்டன. பேசித் தீர்க்கப்படவேண்டிய பிரச்சனைகள் இராணுவ ரீதியாக தீர்க்கப்பட்டன. இது சிவசண்முக மூர்த்தி (சுந்தரம்), இறைகுமாரன், உமைகுமாரன் (உமா), தேவசேகரன் (ஒபரோய் தேவன்) என்றுமரணத்துள் வாழ்கிறது. இளைஞர் களின் இந்த சுத்த இராணுவப் போக்கினால் மக்கள் பார்வையாளராகவே வைக்கப்பட்டனர். பாராளுமன்ற அரசியல் தலைவர்கள் கொழும்பில் இருந்து தமிழீழத்தை வாங்கி வருவார்கள் என்று எண்ண வைத்தது. இன்று இந் நடவடிக்கைகள் பெடியங்கள் எல்லாம் செய்வாங்கள் என்று



மக்களை பார்வையாளராகவே வைத்துள்ளது. இப்படியே மக்கள் தொடர்ந்து இருப்பார்களேயானால் மிக மோசமான விரக்திக்குள்ளாவார்கள். இதை எதிரி தனக்கு சாதகமாகப் பயன்படுத்தும் ஆபத்தும் உள்ளது.

இவ்வாறான அபாயமான இராணுவக் கண்ணோட்டத் தின் போக்கிற்கான காரணங்களை பின்வருமாறு தொகுக்க லாம்.

1. அரசியல் தெளிவின்மையும் நீண்டகால நோக் கின்மையும்.
2. கடந்த கால அரசியல் தலைமையின் பாராளுமன்ற சந்தர்ப்பவாதம், அரசியலை முற்றாக நிராகரிக்கின்ற ஒரு போக்கை உருவாக்கவும் அதன் காரணமாக வெறும் அரசியல் என்ற அந்தத்தில் இருந்து (EXTREAM) மறு அந்தத்திற்கான தீவிரப் போக் கிற்கு ஏதுவாயிற்று.
3. அனுபவ வேட்கை அல்லது துணிச்சல் வாதம் (ADVENTURS RISM) மூலம் அங்கத்தவர்கள் சேர்க் கப்பட்டமை,
4. மத்தியதரவர்க்க தனி நபர்வாதப் போக்கின் காரணமாக ஸ்தாபன வேலைகளில் ஈடுபட்டு அரசியல் மார்க்கத்தை முதன்மைப்படுத்தி வேலை செய்ய விரும்பாமையும் இவ் வேலைகளில் ஏற்படும் சிறு கஷ்டங்களுக்கு சலிப்புறுதலும்.
5. ஒரு சில வீரர்களே வரலாற்றை உருவாக்கலாம் என்ற கற்பனாவாதப் போக்கும் நம்பிக்கையும்.
6. மக்கள் சக்தியைவிட ஆயுதம் மீது அதீத நம் பிக்கை.

இன்று அனுபவரீதியாக உண்மையான விடுதலைப் போராளிகள் பலரும் சுத்த இராணுவக் கண்ணோட்டத்தின் பாதிப்பை உணரத் தொடங்கியுள்ளனர். எமது பணி யெல்லாம் உணரத் தொடங்கியுள்ள தேவையை சரியான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதையில் வென்றெடுக்க முயல்வதே. மாறாக மக்களுக்கு விடுதலை தேவை என்ற உணர்வை உருவாக்க ஒடுக்கு முறையை குவியப்படுத்துவதல்ல. எதிரி இதனை செய்து கொண்டிருக்கிறான். எமது பணியெல்லாம் அதற்கெதிராக மக்களை ஸ்தாபன மயப்படுத்தி விடுதலையை வென்றெடுப்பதற்கான போராட்டத்திற்கு மக்கள் சக்தியை திரட்டுகிற பணியே ஆகும்.

மக்களே மக்கள், மட்டுமே வரலாற்றை உருவாக்கும் சக்தியாவர். மாறாக தனி நபர்களோ கருவிகளோ (ஆயுதங்களோ, அல்ல வரலாறு சில கட்டங்களில் தன போக்கிற்கு அமைவாக வேலை செய்யும் சில நபர்களை உருவாக்குகிறது, அந்த நபர்கள் வரலாற்று போக்கை உணர்ந்து செயற்படும்போது வரலாற்றில் பொறிக்கப்படுவர்.

எனவே நிச்சயமற்ற போராட்ட முறையான தன்னெழுச்சியான போராட்ட முறையை நிராகரிப்போம். நிச்சயமானதும் எதிர்கால சுபிட்ச வாழ்வை, சுயசார்பு பொருளாதாரத்தை கட்டியெழுப்பக் கூடியதுமான மக்கள் போராட்டத்தை தெரிந்தெடுப்போம். அரசியல் மார்க்கத்தை முன்னெடுத்து ஆயுதம் ஏந்திய மக்கள் போராட்டத்தை முதன்மைப் படுத்துவோம்.



## தேசிய இனப் பிரச்சனை
## ஒரு சுருக்கமான குறிப்பு

**தேசிய** விடுதலைப் போராட்டம் ஒன்றை சரியாக முன்னெடுப்பதில் தேசிய இனம் பற்றிய பூரணமான அறிவு அவசியமானதாகும். தேசம், அவற்றின் உருவாக்கம் பற்றி நாம் தெளிவாக புரிந்துகொண்டாலே எமது பிரச்சனையின் அடிப்படையை தெரிந்து கொள்ளவும் அதன் மூலம் எமது எதிரியைப் புரிந்துகொண்டு எமது போராட்டங்களை சரியாக நெறிப்படுத்தவும் முடியும். எனவே தேசிய இனம் (தேசங்கள்) என்பனபற்றி சுருக்கமாகக் கவனிப்போம், நவீன இயந்திரக் கருவிகள் கண்டு பிடிக்கப்படும் வரை அல்லது வியாபாரத்தின் தேவை காரணமாக விஞ்ஞானத்தின் தேவை ஏற்படும் வரை மக்களிடம் நிலப் பிரபுத்துவ அமைப்புக்குரிய வாழ்க்கை முறையே நிலவியது. ஒப்பீட்டளவில் நிலப்பிரபுத்துவம் பின் தங்கியஉற்பத்திப்பொருளாதார வாழ்க்கையாகும் அக்காலத்தில் மக்களது வாழ்க்கை சிறிய கிராமங்களுக்குள் (நிலப்பிரபுவின் தலைமையின் கீழ்) அடங்கியிருந்தது. அன்றைய உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சி ஒரு கிராமத்தை பராமரிப்பதற்குபோதுமானதாக இருக்கவில்லை அக்கால கிராமிய பொருளாதார வாழ்வு, கிராம உணர்வு அல்லது கேந்திர உணர்வையே கொண்டிருந்ததன்றி இன உணர்வையோ, தேச உணர்வையோ கொண்டிருக்கவில்லை. மன்னராட்சியின் போது மக்கள் ஒரு பொழுது ஒரு மன்னனின் கீழும் இன்னொரு பொழுதில் இன்னொரு மன்னனின் கீழும் சுதந்திரமாகவே இருந்தனர். மன்னராட்சி ஏற்கனவே உள்ள அமைப்பை கட்டிக்காக்கும் வண்ணம் 'முறை' செய்வதாக இருந்ததன்றி அதற்கு மேற்பட்ட அல்லது அதை மாற்றக்கூடியதாக இருக்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வியாபாரத்தின் தேவை காரணமாக தோன்றி உந்தப் பட்ட விஞ்ஞானத்தின் வளர்ச்சி, உற்பத்தி முறையில் ஒரு பாய்ச்சலையும்(LEAP) ஏற்படுத்தியது. இதனால் மக்களது பொருளாதார வாழ்வு கிராமிய எல்லைகளைக் கடந்து பரந்து பட்ட மக்களுடன் பிணைந்துள்ளது, மக்களும் முன் போலன்றி கிராமத்துக்குள் அல்லாமல் பரந்தபட்ட மக்களில் தங்கியிருக்க வேண்டிய நிலை உருவாயிற்று, இத் தகைய முதலாளித்துவ வளர்ச்சியானது கிராமத்திலிருந்து ஒரு மொழி, ஒரு கலாச்சார பண்பாடு கொண்ட பிரதேசத் தினூடாகவும் வளர்ந்தது. மறுபக்கமாக பிரதேசம், மொழி கலாச்சாரம் என்பது முதலாளித்துவ வளர்ச்சிக்கு வழி சமைப்பதாகவும் வரையறுப்பதாகவும் இருந்தது. இப் பொழுதுதான் மக்கள் ஒரு தேசிய பொருளாதாரத்தைக் கொண்டவர்களாகவும் அதன் வழியே தேசிய வாழ்வு தேசிய உணர்வுகொண்டவர்களாகவும் வளர்ச்சி பெற்றனர். ஆம் இவ்வாறுகத்தான் தேசங்கள் உருவாயின.

இப்படியான தேசங்கள் மேற்கு நாடுகளிலே 17-ம் 18-ம் நூற்றுண்டுகளில் உருவாயின. சமச்சீரற்ற பொருளா தார வளர்ச்சி காரணமாக மேலை நாடுகளில் தேசங்கள் உருவாகி வளர்ச்சி பெற்றுவந்தபோதும் ஏனைய நாடுகள் முதலாளித்துவத்திற்கு முந்திய பொருளாதார வாழ் நிலையிலேயே வாழ்ந்து வந்தனர். ஆரம்பத்தில் வியாபார நோக்கம் கருதி லத்தின் அமெரிக்கா, ஆசிய, ஆபிரிக்க நாடுகளிற்கு வந்த மேற்கத்தைய வியாபாரிகள் காலப் போக்கில் காட்டுமிராண்டித் தனமான கொள்ளை வெறிச் செயல்கள் மூலம் மேற்கத்திய மூலதனங்களை பல மடங்கு பெருக்கினர்.

பெருகிய மூலதனத்தின் சந்தை தேவைக்காக லத்தின் அமெரிக்கா, ஆசிய, ஆபிரிக்க நாடுகள் மேற்கு நாடுகளின் காலனிகளாக்கப்பட்டன. அவற்றின் சந்தைகளை பலவந்த மாகக் கட்டிப்போட்டன. இந்நாடுகள் ஏகாதிபத்திய உற்



பத்தி தேவைகளுக்காகவும், மூலப்பொருள் ஏற்றுமதிக்களங் களாகவும் பெருகிய உற்பத்திக்களுகான சந்தைகளாகவும் மாற்றியமைக்கப்பட்டன. இந்த நாடுகளில் தேசிய முதலா ளித்துவ வளர்ச்சி அடித்து நொருக்கப்பட்டது. ஏகாதிபத் தியம் முதலாளித்துவ போட்டியை தவிர்ப்பதற்காக இந் நாடுகள் முன்னேறிய ஏகாதிபத்தியங்களின் உற்பத்தி யில் ஒரு அங்கமாகவும், பின்தங்கிய நிலப்பிரபுத்துவ வாழ் முறையின் பிரிக்க முடியாத பிணைப்புடனும் ஒரு சேரக் கட்டிப் போடப்பட்டன. இந்நோக்கம் கருதி காலனி நாடு களில் தனது அரசை ஏகாதிபத்தியம் வலுவாக்கி வைத் திருந்தது. பின்னர் மூலதனப் பிணைப்புக்கள் இந் நாடுகளை சிக்க வைத்து விட்டதாலும் இந்நாடுகளில் எழுந்த சுதந்திர எழுச்சியைக் கண்டு அஞ்சியும் தனது அரசைத் தனது தரகர் களிடம் கொடுத்துச் சென்றது. முதலாளிகளிடமிருந்து முதலாளிகளிடம்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஆயினும் இன்றுவரை இவ்வரசுகள் ஏகாதிபத்திய நலன் கருதி தேசிய எழுச்சியை திட்டமிட்டபடி அடக்கி ஒடுக்கி வருகின்றன. இதற்காக தேசிய இனத்தின்பிரதேசம், கலாச்சாரத்தை இல்லாதொழிப்பது இதன் பிரதான போர்த் தந்திர மாகும்.

முன்னேறிய ஏகாதிபத்தியத்தோடு பலவீனமாக வளர்ந்துவரும் தேசிய முதலாளித்துவத்தால் எதிர்த்து விடுதலைக்காகப் போரடுவது இயலாததே- அது விடுதலையில் பெரு விருப்புக் கொண்டிருந்தபோதும் அதற்கு அது முடியா ததே. எனவே இத்தேசிய எழுச்சிப்போராட்டம் தொழி லாளர், விவசாயிகள், மத்தியதரவர்க்கத்தினர் தலைமை யிலேயே வெற்றிபெறும். இவர்கள்தமது நிலைமையில் தேசிய முதலாளிகளை அழைத்துச் செல்வது அவசியமானதாகும், அத்தகைய ஒரு விடுதலைப் போராட்டத்தின் மூலமாகவே தேசங்கள் விடுதலை பெறமுடியும்.

நமது தமிழ் பேசும் மக்களை பொறுத்தவரை சாதி அடிப்படையிலான கிராமசமுதாயங்களிலேயே மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழ்ந்து வந்தனர், இதை ''முறை'' செய்துவளர்க்க பல அரசுகள் இருந்துவந்தன. 16-ம் நூற்றாண்டின் பின்னான அந்நியர் வருகையைத் தொடர்ந்து நாடு கைப்பற்றப்பட்ட பின் ஏகாதிபத்திய சந்தைகளாகவும் மூலப்பொருளேற்றுமதிக்களமாகவும் (பெருந்தோட்டங்கள்)இது மாற்றியமைக்கப்பட்டது. இது 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே பெரிதும் நிறைவேறி விட்டதெனலாம் பிறநாடுகளின் தேசிய எழுச்சிகள் விடுதலைப்போர்களைக் கண்டு புகழ் பூத்த சுதந்திரங்களை வழங்குவதாகிய பாவனையில் தனது அரசை சிங்கள தரகு முதலாளிகளின் கையில் அளித்துச் சென்றனர். சிங்கள தரகு முதலாளித்துவ அரசு ஏகாதிபத்திய வளர்ச்சிப் பாதையில் சிங்கள தேசிய எழுச்சியை பெருமினவாத வெறியாக்கி மட்டுப் படுத்தப் பட்ட பொருளாதார வாய்ப்பில் தமிழ் மக்களுக்கு எதிரான போட்டி போடுதலாகப் பகையாக மாற்றிச் சிதைத்தது.

வடக்கு கிழக்குவாழ் தமிழ் மக்கள் வரலாற்றுரீதியாக நிலைபெற்ற மக்கள் கூட்டமாக பொதுவான பாரம்பரிய பூமியில் தமது பொதுவான கலாச்சார வாழ்வில் தம்மை ஒரு தேசிய இனமாக வளர்த்துக்கொண்டுள்ளதால் எழுந்த தேசிய எழுச்சியை பலாத்காரமாகவும் பிரதேச பறிப்பின் மூலமாகவும், மொழியுரிமை கலாச்சார வாழ்வு என்பவற்றை சிதைப்பதன் மூலமாகவும் ஒடுக்க முயல்கிறது. இப் பலவகையான ஒடுக்கு முறையினின்றும் தமிழ் தேசிய இனமானது படிப்படியாக எழுந்து புத்தெழுச்சியுடன் போராடி வருகின்றது. தமிழ் தரகு முதலாளித்துவமானது தமிழ் அரசியல் தலைமையை பயன்படுத்தி சிங்களத் தரகு முதலாளித்துவத்துடன் தனது இலாப வேட்டைக்காக இப்போராட்டத்தை பயன்படுத்திய போதும் தமிழ் தேசிய எழுச்சி அத்தகைய சந்தர்ப்பவாதத் தலைமைகளை தூக்கியெறிந்து தேசிய முதலாளிகள் தொழிலாளர், விவசாயிகள், மீனவர்கள் அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து இப் போராட்டம் புதுப் பொலிவுடன் வலிமை பெற்று வருகின்றது.



வடக்குகிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமாகும். இப்பூமியில் அவர்கள் பொதுவான மொழி கலாச்சாரம் பொதுவான வாழ்வும் கொண்ட ஒரு தேசிய இனமாக உருவாகி வளர்ந்துள்ளனர். பிரக்ஞை பூர்வமான இவ்வுணர்வே இன்றைய எழுச்சிப் போராட்டங்களுக்கான அடிப்படை காரணங்களாகும்.

மலையக மக்களை பொறுத்தவரையில் இவர்கள் உணர்வு ரீதியாக தம்மை இந்தியர்கள் எனக் கருத வேண்டிய நிலை இவர்களது குடியுரிமை, பிரஜா உரிமை பறிப்பால் ஏற்படத் தொடங்கியது. இவர்கள் நவீன அடிமைகளாகத் தோட்டங்களில் வாழ்ந்த நிலையும் இந்தியாவில் இருந்து பிரிட்டிசாரல் கொண்டு வரப்பட்டமையாலும் இவர்களை மண் பிடிமான மற்றவர்களாக்கியது. இந் நாட்டில் தமது வாழ்வு ஸ்திரம் பற்றிய சந்தேகத்தை சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் உறுதிப் படுத்தியது. இவர்கள் இந்நாட்டின் தேசிய வாழ்விலிருந்து ஒதுங்கியவர்களாகவே காணப்பட்டனர். இதனால் இவர்களால் ஒரு தேசிய இனமாக உருவாக முடியவில்லை. அடுத்தடுத்து வந்த கலவரங்களும் தரகு முதலாளிய அரசுகளின் இனவெறி ஒடுக்குதலும் இவர்களை இந்தியா செல்லவோ, தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களை நோக்கி புலம் பெயரவோ தூண்டியதல்லாமல் தம்மை ஸ்தாபித்து போராடும் தன்மையை இல்லாமல் செய்துவிட்டது. தேசிய இனமாக வளர முடியாமல் போனதே இதற்கான காரணமாகும். தனியான கலாச்சாரம், மொழி என்பன போன்ற பொதுவான பண்பாட்டு அம்சங்கள் இருந்தபோதிலும் நிலம் மீதான பிணைப்பற்ற வாழ்வு முறை தேசிய உருவாக்கத்தை சிதைத்துவிடக் கூடியது என்பது முக்கியமானது. மேற் குறிப்பிட்ட காரணங்களினால் மலையக மக்கள் ஒரு தேசிய சிறுபான்மையினர் (NATIONAL MINORITY) என்ற நிலையிலேயே உள்ளனர் என்பது தெளிவாகிறது.

முஸ்லிம் மக்களையும் பொறுத்தவரையில் இவர்களிடம் முஸ்லிம்கள் என்ற தனித்துவமான உணர்வு பொதுவானதாக இருந்தபோதும், இவர்கள் ஒரு பொதுப் பிரதேசவாழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வின்றி சிதறடிக்கப்பட்டவர்களாக இருப்பதால் ஒரு தனியாக தேசிய இனமாக வளர முடியவில்லை. முஸ்லிம் மக்கள் தேசிய சிறுபான்மையினர் என்ற நிலையிலேயே உள்ளனர். ஆனால் தமிழ் மக்களை போலவே இவர்களும் இன வாத ஒடுக்கு முறையினால் பாதிப்புறுபவர்கள் என்ற வகையில் அரசுக்கெதிராக தவிர்க்க முடியாதபடி போராட வேண்டியவர்களாகின்றனர். பேசும் மொழிப் பிரச்சனை வாழும் பிரதேசப் பறிப்பு என்பவை போன்ற ஒடுக்கு முறைகள் இவர்கள் தமிழ் மக்களுடன் சேர்ந்து போராட வேண்டிய அவசியத்தை உருவாக்குகின்றன.



## தேசிய இனப் பிரச்சினையும் இடது சாரிகளும்

இலங்கையில் இடதுசாரிகள் இயக்கம் 50 வருட நீண்ட கால வரலாற்றை உடையதுபோலவே தமிழ் மக்களின் இனப் பிரச்சனையிலும் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை செய்து வந்துள்ளது. 'சூரியமல்' இயக்கத்தை தொடர்ந்து 1935 இல் ஆரம்பிக்கப்பட்ட லங்கா சம சமாயக் கட்சியும் சரி 1940இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் சரி. ஆரம்பத்தில் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து என்ற கோரிக்கையை முன் வைத்தனர். இதே கட்சிகள் தாம் பாராளுமன்ற சந்தர்ப்ப வாதச் சேற்றில் மூழ்கியதும் சம அந்தஸ்து கோரிக்கையை கைவிட்டு மந்திரி பதவிக்காக அலையத் தொடங்கின. இவர்கள் இருவரும் 1966இல் தமிழ் மொழிக்கு உரிமை வழங்கும் முகமாக கொண்டுவரப்பட்ட தமிழ் விசேட மொழிச்சட்டத்தை எதிர்த்து தோசை மசால்வடைக் கோசம் போட்டு ஊர்வலம் சென்றனர். இவர்கள் இருவரும் கூட்டு முன்னணி அரசில் பதவி வகித்தபோது தமிழ் மொழி உரிமையை மறுத்து அரசியல் யாப்பு தயாரித்தனர். இவர்கள் இருவரும் பாராளுமன்ற அரசியலை நடத்தும் முகமாக இனவாதத்தில் மூழ்கிப் போனதே இவற்றிற்கான அடிப்படையாகும்.

1943ம் ஆண்டு தனது மகாநாட்டில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்த போதும் அதற்கான வேலைத் திட்டங்களையும் முன்வைக்காது பிரதேச சுயாட்சியே அதற்கு உரிய தீர்வென சொல்லித் திரிந்தனர். தமிழ் மக்களின் வெகுஜன போராட்டமான 1961 சத்தியா கிரகத்தை எதிர்த்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1964இல் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து வெளியேறிய ஒரு பகுதியினர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனசார்பு) அமைத்தனர். இவர்களும் சுயநிர்ணய உரிமைபற்றி கூறினர். எனினும் இனப் பிரச்சனை குறித்து சமூக பொருளாதார ஆய்வின்றி இப்பிரச்சனைகளின் போக்கை புரிந்து கொள்ளத் தவறியவர்களாக பிரதேச சுயாட்சியை தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வு என முன்வைத்தனர். பிரதேச சுயாட்சியை பெறுவதற்கான போராட்டங்களை முன் எடுப்பதை விட்டுவிட்டுஅதுபுரட்சியின் பின்னரே சாத்தியம்எனதள்ளிப் போட்டு வந்தனர். இன்று தமிழீழம்சாத்தியமற்றது என்பதற்குபொருளாதாரகால நிலைகளை சுட்டிக்காட்டுகின்றனர். தேசிய விடுதலைப் போராட்டத்தை மறுதலிக்கும் அதே சமயம் தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை அங்கீகரித்து முன்னுக்குப் பின் முரணாக பேசுகின்றனர்.

1971 இற்கு பின்னர் சண்முக தாசனின் (சீனசார்பு) கட்சியில் இருந்துபிரிந்த கம்யூனிஸ்ட் கட்சி (மா/லெ) இடது கம்யூனிஸ்ட் கட்சி என்பனவும் வரட்டுத்தனமாக தேசிய விடுதலைப் போராட்டத்தை எதிர்த்தனர். இவர்கள் அன்னிய ஊடுருவல் வரலாமென்றும் பிரிவினை சாத்தியமில்லை என்றும் கூறி விடுதலைப் போராட்டத்தை மறுதலித்து எதிர்த்தனர்.

1966இல் சண்முகதாசனின் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து சண்முகதாசனின் தமிழ்த் தலைமையால் இலங்கை புரட்சி சாத்தியமில்லை எனக்கூறி பிரிந்து சென்ற இளைஞர்களால் ஜே. வி. பி. (J.V.P.) ஆரம்பிக்கப்பட்டது இவர்கள் இனவாதத்தைப் பயன்படுத்தியே அங்கத்தவர்களை சேர்த்தனர். இவர்களது இரண்டாவது வகுப்பான இந்திய விஸ்தரிப்பு வாதம் என்ற வகுப்பில், இனவாதம்—மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகவும் தமிழ் மக்களுக்கு எதிராகவும் முன்வைக்கப்பட்ட இனவாதம்—தூண்டப்பட்டது. 1970இல் கூட்டு முன்னணி அரசைப்



பதவிக்கு கொண்டு வருவதற்கான வேலைகளில் இவர்கள் ஈடுபட்டனர் J.V.P. இன் பின்னால் திரண்டிருந்த இனவெறி ஊட்டப்பட்ட இளைஞர்களினதும் மாணவர்களுடையதும் தூண்டுதலினாலேயே தரப்படுத்தல் அமுல் படுத்தப்பட்டது. இவர்கள் 70இல் கூட்டு முன்னணியை ஆதரித்தபோதும் அதன் போக்கில் அதிருப்தியுற்று 1971இல் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இக்கிளர்ச்சி இராணுவ அடக்கு முறையினால் நசுக்கப்பட்டு இவர்களது தலைவர்கள் சிறை பிடிக்கப்பட்டார்கள். 1977இல் பதவிக்கு வந்த அதி உத்தமர் ஜே. ஆரின் ஆட்சி இவர்களை விடுதலை செய்ததும் இவர்கள் இடதுசாரி வேடத்தினால் தமது இனவாத நடவடிக்கைகளை மறைத்துக்கொண்டு பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழ் மக்கள் மத்தியில் அவர்களது சுய நிர்ணய உரிமையை ஆதரிப்பதாகவும் சிங்கள மக்கள் மத்தியில் பிரிவினையை எதிர்ப்பதாகவும் இரட்டை நாக்கு கோஷம் போட்டு வரும் இவர்கள் இருபுறமும் நல்லவர்களாக நடிக்க முயன்று வருகின்றனர்.

இந்த இடதுசாரிகள் பலரும் பிரிவினைக்கெதிராக குரல் எழுப்புவது அசல் சந்தர்ப்பவாதப் போக்கின்காரணமாகவே. ஆயினும் சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைபற்றிக் கூறும் நவசமசமாஜக் கட்சி, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஆகியவற்றின் நேர்மையான போக்கை நாம் மறந்துவிடவில்லை. இருப்பினும் இவர்கள்கூட தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனை இன்று கூர்மையடைந்துள்ள பிரதான பிரச்சனையென கருதி அதற்காகப் போராடுவதற்கு தயாராக இல்லை.

மொத்தத்தில் இந்த இடது சாரிகள் எல்லாம் தமிழ் மக்களின் நடைமுறைப் பிரச்சனையினூடாக அவர்களையும் அணி திரட்டிப் போராடுவதற்குப்பதிலாக பெரும்பான்மை சிங்கள மக்களையே நம்பி அரசியல் நடத்தி வருகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்கள் சோசலிசம் வந்தால் எல்லாம் சரியாகும் என்று வரட்டுத்தனமாகக் கூறிக்கொண்டு நடைமுறைப் போராட்டங்களை புறக்கணித்து வருகின்றார்கள். நிலையில்லாத நோக்கில் பிரச்சினைகளை அணுகும் இவர்கள் போக்கின் காரணமாக தமிழ்மக்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தைப்பற்றியோ அந்தப் போராட்டம் நடத்தவேண்டிய அவசியத்தைப் பற்றியோ எந்தவித அக்கறையுமின்றி அல்லது எந்தவித புரிந்துணர்வுகளும் இன்றி கண்மூடித்தனமாக அவற்றை எதிர்த்து வருகின்றார்கள்.

மொத்தத்தில் தேசிய இனப் பிரச்சனைபற்றிய நோக்கில் இலங்கை இடதுசாரிகளை மூன்றுவகைப்படுத்தலாம். ஒன்று சிங்கள இன வாதத்தில் மூழ்கி தமது அரசியல் இலாபத்திற்காக பிரிவினைவாதத்தின் பக்கம் சேர்ந்தவர்களின் பகுதி. இவர்கள் தமிழ்மக்களின் எதிரிகளேயாவர். இன்னொருபிரிவினர் சரியான அணுகுமுறை இன்மையால் தமிழ்மக்களின் போராட்டத்தைப் புரிந்துகொள்ளாத போக்கினர். சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியை விளங்கிக்கொள்ள முடியாது தவிப்பவர்கள். இவர்களையிட்டு நாம் அனுதாபப்படுவதை விட்டுவேறென்ன செய்யமுடியும்? இவர்களின் குழப்பத்தை போக்க வேண்டுமானால் உதவலாம். மூன்றாவது பிரிவினர் தமிழீழப் போராட்டத்தையும் தமிழ்மக்களது நியாயமான போராட்டத்தையும் ஆதரிப்பவர்கள். இவர்கள் எண்ணிக்கையில் மிகவும் சொற்பமாகவும் உதிரியாகவுமே காணப்படுகின்ற போதும் இவர்களை நாம் நேச சக்திகளாகத் தொடர்பு படுத்திக்கொள்வது அவசியமாகிறது.

## தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் வழி முறை

தமிழ்மக்கள் தமது ஜனநாயக உரிமைகளைப் பெற மக்கள் ஜனநாயகப் புரட்சியை வெற்றிகரமாக நடத்தி முடிக்க தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பது இன்றைய அத்தியாவசிய தேவையாகும். சமுதாயத்தின் சமச்சீரற்ற வளர்ச்சியானது,முரண்பாடுகளின் ஏற்றதாழ்வான வளர்ச்சியைக் கொண்டுள்ளது. இன்று தமிழ்மக்களுக்கும், அரசிற்கும் இடையிலான முரண்பாடு மற்றெல்லா முரண்பாடுகளையும் விடக் கூர்மையடைந்துள்ளது. கூர்மையடைந்துள்ள இப்பிரதான முரண்பாட்டை நீக்க, தமிழ் மக்கள் தமது தேசியவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பது தமிழ்மக்களின் விடுதலைக்கு மட்டுமல்ல சிங்களப் புரட்சிகர சக்திகளின் வளர்ச்சிக்கும் அவசியமானது. வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழ்மக்கள் அப்படியொரு தேசிய இனமாக வளர்ந்துள்ளனர் என்பதனை நாம் முன்பு குறிப்பிட்டோம். ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் தமிழ் மக்களுக்கு தமக்கான இறைமையுள்ள அரசை அமைக்கும் உரிமை உண்டு. தமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கிறவர்கள் என்ற ரீதியில் சகல தமிழ் தேசியப் பிரிவினரையும் உள்ளடக்கிய ஒரு போராட்டப் பாதையை தெளிவாக மக்கள் முன் வைப்பது எமது கடமையாகும். தமிழீழத்தைப் பெறுவதற்கான போராட்டமும், தமிழ்மக்களின் தேசிய விடுதலைக்கான போராட்டமும் வெவ்வேறானவை என்றும், பின்னையது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது என்றும் தென் இலங்கையில் சில இடதுசாரிகள் கருதுகின்றனர். இக்கருத்து தவறானதென்பதற்கு நாம், தமிழ்மக்கள் எவ்வாறு ஒரு தேசிய இனமாக வளர்ந்துள்ளனர் என்பதையும் தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களினதும், சிங்கள மக்களினதும் ஒருமித்த போராட்டம் ஏன் சாத்தியமில்லை என்பதையும், தெளிவாக முன்வைக்க விரும்புகிறோம்.

தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம் என்பதனை நாம் ஏற்கனவே கூறியுள்ளோம். இனி ஒருமித்த போராட்டம் பற்றிய பிரச்சனைக்கு வருவோம். இலங்கையில் தேசிய எழுச்சி பண்டாரநாயக்காவினால் வளர்த்தெடுக்கப்பட்டபோது, அது சிங்கள தேசிய இனத்தின் எழுச்சியாகவே இருந்தது. இதன் காரணமாகவே தமிழினத்தின் தேசிய எழுச்சி இனவாதமாக இனம் காட்டப்பட்டது' தமிழ் தேசிய வளர்ச்சி அன்றைய தமிழ்தலைமையால் சகல பரிணாமங்களிலும் வளர்த்தெடுக்கப்படவில்லை. அடிப்படையில் இரண்டு தேசங்களாக இருந்த நாட்டிலே தேசிய இனங்கட்கிடையிலான சமனற்ற வளர்ச்சியே முரண்பாடுகளை தூண்டிவிட்டுள்ளது.

இன்று தமிழ் தேசிய இனம் ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனமாக இருக்கின்றது. இக் காரணமாகவே இயல்பாகவே ஒடுக்கும் தேசிய இனமானசிங்கள இனத்தைவிடவும் போர்க் குணம் மிக்கதாக இருக்கின்றது. ஒடுக்கப்படும் தேசிய இனமும் ஒடுக்கும் தேசிய இனமும் ஒன்றுபட்டுப் போரிடல் சில குறிப்பிட்ட நிலமைகளிலேயே சாத்தியமாகின்றது. ஒடுக்கும் தேசிய இனத்திற்கும் ஒடுக்கப்படும் தேசிய இனத்திற்குமிடையிலான முரண்பாடு இரண்டாம் பட்சமானதாயும் அவை இரண்டிற்குமான பொது ஒடுக்குமுறை முதலாம் முரண்பாடாகவும் இருக்கையில் இது சாத்தியமாகும். ஆனால் எமது வரலாற்று சமூக நியதிகள் பொதுவான முரண்பாட்டைவிட இனங்களிற்கிடையிலான முரண்பாட்டை பிரதானமானதாக வளர்த்துள்ளன. எனவே ஒன்றிணைந்த போராட்டம் என்ற பேச்சுக்கு இடமில்லை. இனங்களுக்கிடையிலான முரண்பாடு இரண்டாம் பட்சமானதாக மாறும் போதே அது வெற்றியளிக்க முடியும். ஒடுக்கும் தேசிய இனத்தின் போராட்ட சக்திகள்



ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் போராட்ட சக்திகளை போலல்லாது மழுங்கி இருப்பதால் ஒடுக்கப்படும், தேசிய இனம் ஒடுக்கும் தேசிய இனத்தின் புரட்சிகர சக்திகள் விழிப்படையும் வரை பொறுத்திருக்க முடியாது. அன்றியும் தேசிய இனங்கட்கிடையிலான முரண்பாட்டிலேயே தனது இருப்பை ஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கும் இவ் இனவாத அரசு இருக்கும் வரை அது சாத்தியமில்லை. எனவே முதல் விழிப்படைந்த தமிழ்மக்கள் அரசுக்கெதிராகப் போராடும் போதுதான், அதனால் அரசு ஆட்டம் காணும் போதுதான் அல்லது தமிழ்மக்களின் விடுதலைக்குப்பிறகுதான் சிங்கள இனம் விழிப்படைய முடியும். பேரினவாத ஒடுக்குமுறைக்கு பலியாகிவரும் தமிழினம் தனது போராட்டத்தை முன்னெடுத்து செல்கையிலே அது சிங்கள மக்களை தாம் அனுபவிக்கும் போலி ஜனநாயக தன்மைகளைப் புரிந்துகொள்ள செய்யும் பண்புடையதாக இருக்கும். எனவே தமிழ் மக்கள் சிங்கள மக்கள் போராடும்வரை, பொறுத்திருப்பதென்பது தற்கொலைக்கு சமானமென்பதால் அவர்களது தேசிய விடுதலைப்போராட்டம் தமிழீழமாயன்றி வேறாக இருக்க முடியாது. சிங்களமக்களைப் பொறுத்தவரை அவர்களது போராட்டம் பெருந்தேசிய வளர்ச்சியை தூண்டும் சிறிலங்கா இனவாத யூ. என். பி அரசிற்கெதிராக திருப்பப் படவேண்டும். சிங்களமக்கள் ஒரு தேசிய இனமாக வளர்க்க படுவதற்கு பதில் தேசிய வெறி கொண்டவர்களாக வளர்க் கப்படுகிறார்கள். இந்த வெறியினால் அவர்களை மயக்கி இந்த ஜே, ஆரின் தரகு முதலாளிய அரசு நவகாலனிய சுரண்டலுக்கு இடமளிக்கிறது. சிங்களமக்கள் விழிப்புற்று தமது சொந்த ஜனநாயகத்தை பெறுவதற்காக இவ் அரசிற்கெதிராகப் போராடவேண்டும். சிங்கள மக்கள் ஒடுக்கப்படுகின்ற தமது சகல பிரிவினரையும் உள்ளடக்கிய ஒரு புதிய ஜனநாயகப் புரட்சி மூலமே தமது சொந்த தேசியத்தின் இறைமையை காப்பாற்றிக்கொள்ளவும், தன்னை வளர்த்துக் கொள்ளவும் முடியும். சிங்கள மக்களின் புரட்சிகர விழிப்புணர்வை மந்தப்படுத்தும் போக்கில் பேரினவாதம் பேசிவரும் அரசின் போக்கை அம்பலப்படுத்தி இப் பாசிச அரசை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தூக்கி எறிந்துவிட்டு உண்மையான மக்கள் ஜனநாயக அரசை உருவாக்குகின்ற பணியில் சிங்களமக்கள் உடனடியாக குதிக்கவேண்டியவர்களாகிருர்கள்.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் அரசியல் தலைமை தமிழ் பிற்போக்குவாதிகளின் கைகளிலேயே இருந்து வந்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ் தேசிய இனம் தனது விடுதலையை வென்றெடுப்பதையும், தனக்கான ஒரு அரசை உருவாக்குவதையும் நோக்காகக் கொண்டு போராடி வருகிறது. இது ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக முழுமையாக வளர்க்கப்படவில்லை. போராட்டத்தினை சுய நலம் காரணமாக இத் தமிழ்த்தலைமை காட்டிக் கொடுத்துள்ளது. இவ்விடுதலைப் போராட்டத்தை பிற்போக்கு தலைமைகளால் முன்னெடுக்க முடியாததே இதற்குக் காரணமாகும். இன்னும் கூட படித்த இளைஞர்களே விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்குகிருர்கள். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு சரியான தலைமைச் சக்தி முக்கியமானது. இதைச் சரியாகப் பெற்றுக்கொள்ள நாம் தமிழீழத்தின் பொருளாதார அமைப்பையும் சமூக வளர்சிகளையும் சரியாக ஆய்வு செய்யவேண்டும். தமிழீழப் பிரதேசத்தை பொறுத்தவரை சிறு உற்பத்தி முறையே பிரதானப் பங்கு வகிக்கின்றது. 60.|· மான பிரதான உற்பத்தி முறை மீன்பிடியும் விவசாயமுமே. பாரியகைத்தொழில்கள் வளர்ச்சியடையவில்லை. சிங்கள இனவெறி அரசு தமிழ்பகுதிகளின் கைத்தொழில் வளர்ச்சிக்கு தடையாக உள்ளது. இதனுல் இங்கு பெருமளவு தொழிலாளிகள் கிடையாது. விவசாயம் மீன்பிடிகூட சிறு உடமை முறையில் தான் நடைபெறுகின்றது. அவற்றின் நவீன மயப்படுத்தலுக்கும் சிங்கள இனவெறி அரசே தடையாக இருக்கின்றது.

விவசாயிகள் மீனவர்களைப் பொறுத்தவரை சரியான சந்தையின்மை பெரிய பிரச்சனையாக உள்ளது. யாழ்ப்பாண விவசாயிகளின் பிரதான விளைபொருளான வெங்காயம் மிளகாய் என்பன இருப்பதால் சந்தைக்காக இவர்கள்



கொழும்பையே நம்பியிருக்கின்றனர். மீனவர்களை எடுத்துக் கொண்டாலும் பெருமளவு சந்தை கொழும்பிலேயே இருக்கின்றது. இந்த நிலையில் இவர்களின் வாழ்க்கை உத்தரவாதமற்று இருக்கிறது. கலவரங்களின்போது உற்பத்திப் பொருட்கள் தேங்கிக் கிடக்கும், உற்பத்தி விநியோகம் என்பவற்றை சீராகச் செய்ய நமக்கென ஒரு அரசு தேவையென்பதை இவர்கள் உணரத் தொடங்கியுள்ளனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விவாயிகளும் மீனவருமே பிரதான சக்திகள் ஆவர். எனவே தொழிலாளர் விவசாயிகள் மீனவர், மற்றும் புத்திஜீவிகள், இளைஞர், மாணவர் யாவரும் இணைந்ததொரு முன்னணியை அணி திரட்டுவதன் மூலமே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க முடியும்.

மேலும் தமிழீழப் பகுதியில் யாழ் மாட்டம் அரசியல் ரீதியாக விழிப்படைந்துள்ளளவு ஏனையவை விழிப்படையவில்லை. மற்றைய பகுதியில் அரசியல் மயப்படுத்தல்செய்யப் படவேண்டும்.

எமது விடுதலைப் பாதையில் மூன்று முக்கியமான பணிகள் உள்ளன. 1. அரசியல் மயப்படுத்தல் 2. ஸ்தாபனமயப் படுத்தல்3. அமைப்பின் வழிகாட்டலில் போராடவைத்தல்.

அரசியல் மயம்படுத்தல் மக்களுக்கு எமது கருத்துக்களை எடுத்துச் சென்று பிரச்சாரவேலை செய்வதன் மூலம் செய்யப் படல் வேண்டும். இது சரிவர செய்யப்பட்டாலே மற்றவை இரு பணிகளையும் சரிவர செய்யமுடியும். ஸ்தாபன மயப் படுத்தல் என்பது மக்களை அமைப்புக்குள்ளும், அமைப்பை சுற்றியும் கொண்டுவருதலாகும். ஸ்தாபனத்தில் மூன்று வகையான ஸ்தாபனம் உண்டு.

1. அரசியலமைப்பு,
2. வெகுஜன ஸ்தாபனம்,
3. இராணுவம்

அரசியலமைப்புதான் விடுதலைப் போராட்டத்தின் வழிகாட்டி. உறுதியும் அரசியல் தெளிவும் உடையவர்களை கொண்டதாகவே இதன் அமைப்புக்கள் இருக்கும். ஓர் வலைப்பின்னல் போன்ற அமைப்பை கட்டுதல் மூலமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப் போரை வெற்றிகரமாக நடத்தமுடியும். வலைப் பின்னல் என்பதன் பொருள் அமைப்பை சகல இடங்களிற்கும் வியாபிப்பதும், அதன் கட்டுப்பாட்டை மையப்படுத்தப்பட்ட தலைமையில் (வலையின் கயிறுபோல்) வைத்திருப்பதும் ஆகும். இந்த ஸ்தாபனத்தின் வழிகாட்டலிலேயே வெகுஜன ஸ்தாபனங்கள், இராணுவம் என்பன அமையும்.

எமது எதிரி சிங்கள இனவாத அரசு யந்திரமே. இது அமெரிக்க கைக்கூலியானதரகு முதலாளிய அரசாகும். இந்த அரசு யந்திரத்தை உடைத்தெறிவதும் அதற்குப் பதில் சொந்த அரசை (மக்கள் ஜனநாயக அரசை) நிறுவுவதும் எமது கடமையாகும். எமது அரசை உருவாக்க எமக்கான இராணுவத்தை உருவாக்குவதும் அதனை மக்கள் போராட்டத்திற்கு முன்னணியில் நிறுத்துவதும் அவசியமானது.

இன்று அரசு யந்திரம் பலப்படுத்தப்பட்டுள்ளது. சிங்கள இராணுவம் பலப்படுத்தப்பட்டு தாக்குதலுக்கு தயாராக உள்ளது. இந் நிலையில் நாம் எமது பலம், எதிரியின் பலம் என்ற சக்தி மதிப்பீட்டின் அடிப்படையிலேயே எமது இராணுவ யுத்த தந்திரம், நடைமுறை தந்திரம் என்பவற்றை வகுக்கவேண்டும். எமது யுத்த தந்திரம் மக்கள் யுத்தபாதையே. எமது இன்றைய இராணுவ நடைமுறை தந்திரம் தற்காப்பு போராட்ட முறையே. எனவே தற்காப்பு அணிகளை கட்டுவதே போராட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு முதன்மையான தேவையாகும்.

எமது இராணுவ வேலையை மூன்று கட்டங்களாக வகுக்கலாம்.

1. **தற்காப்பு கட்டம்.**
2. **தாக்குதற் கட்டம்.**
3. **நேரடி உள்நாட்டு யுத்தம்.**

முதலாவது கட்டம் பிரதான போக்காக இருக்கும் போது சில பகுதிகளில் தாக்குதற் கட்டம் இருக்கலாம். முதற் கட்டத்தில் ஸ்தலக் கொரில்லாக்களே (கிராமிய தற்



காப்பு குழுக்கள்) எமது பிரதான இராணுவ அமைப்பாகும். ஸ்தலக் கொரில்லாகளில் இருந்தே கொரில்லா குழுக்களுக்கான அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

தாக்குதற் கட்டம் பிரதான போக்காக இருக்கும்போது கொரில்லாக் குழுக்கள் பரவலாகக் கட்டப்பட்டிருக்கும் இக் கட்டத்திலும் கிராமிய பாதுகாப்பு குழுக்கள் செயற்படும். தாக்குதற் கொரில்லாக் குழுக்களே முதன்மை வகிக்கும். அக்கட்டத்தில் சகல மாவட்டங்களிலும் ஸ்தாபன மயப்படுத்தலும் அரசியல் விழிப்பூட்டலும் பரவலாக செய்யப்பட்டிருக்கும். இதன் வளர்ச்சி மூன்றாவது கட்டத்துக்கு எம்மை அழைத்துச்செல்லும். மூன்றாம் கட்டத்துக்குபோராட்டம் வளர்ச்சியடையும்போது கொரில்லா குழுக்கள் விடுதலை இராணுவமாக உருவாகும். விடுதலையின் பின் இவ் விடுதலை இராணுவம் நாட்டைப் பாதுகாக்கும், உற்பத்திக்கு உதவும் மக்கள் இராணுவமாக செயலாற்றும்.

தமிழீழப் பகுதியில் இருந்து சிங்கள இராணுவத்தை விரட்டி எமது சொந்த ஜனநாயக அரசை உருவாக்குவதே எமது இலக்காகும். அமையப்போகும் அரசு மக்கள் ஜனநாயக அரசாக இருக்கும், இவ்வரசில் உழைக்கும் மக்கள் மாணவர், புத்திஜீவிகள் மற்றும் தேசபக்தி உள்ள சகலருக்கும் ஜனநாயக உத்தரவாதம் செய்யப்படும். இவ் அரசு எந்தவொரு வல்லரசினையோ அல்லது நாட்டினையோ தங்கி நிற்காது, சுயாதிபத்தியமும், சுதந்திரமும் உள்ள அரசாக இருக்கும். எமது தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே எமது இன்றைய உடனடி தேவையாகும். மீன்பிடி, விவசாயம் போன்றவற்றை அடிப்படையாக வைத்து கைத்தொழில் அபிவிருத்தியை அரசு ஊக்குவிக்கும் இவற்றின் உற்பத்தியாளர்கள் உற்பத்தியைப் பெருக்கவும் அரசு ஊக்குவிக்கும். பாரிய தொழில்கள் மற்றும் சேவைகள் அரசுடமையாக நவீன மயப்படுத்தப்படும், நிலச்சீர்திருத்தம் மற்றும் சுரண்டலை கட்டுப்படுத்தல் என்பன அரசினால் மேற்கொள்ளப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது போராட்டம் எந்தவிதத்திலும் சிங்கள மக்களுக்கோ அவர்களுடைய போராட்டங்கட்கோ எதிரானது அல்ல. சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பரஸ்பர நல்லெண்ண ஒட்டுணர்வு நிலவுவதையே நாம் விரும்புகின்றோம். ஆனால் தவிர்க்க முடியாத விதமாக இந்த ஒட்டுணர்வு இனவாத தரகு முதலாளிய அரசினை உடைத்தெறிந்து தமிழ் மக்கள் தமிழ் ஈழத்தை ஸ்தாபித்துக் கொண்ட பின்னரே சாத்தியமாகும்படி எமது பிரச்சனைகள் முரணான விதத்தில் கூர்மையடைந்து இருக்கின்றன. இந்த வரலாற்று விதியைப் புரிந்துகொள்வது எமதுகடமையாகும் சிங்கள புரட்சிகர சக்திகட்கும், போராளிகட்கும் இவ்விடத்தில் நாம் முக்கியமான கருத்தை சொல்லி வைக்க விரும்புகின்றோம். இன்றையநிலையில் தமிழ்மக்கள்மீது இந்த தரகு முதலாளியஅரசு கட்டவிழ்த்து விட்டுள்ளபாசிச ஒடுக்குமுறைகளை நீங்கள் ஒடுக்கப்படும் மக்கள் தமிழ்மக்கள் தானே என்றநினைப்பிலோ, அன்றி அக்கறையின்றியோ பார்த்துக்கொண்டு வாளா இருப்பீர்களாயின் ஒரு சகோதர போராளிக்கு துரோகம் செய்தவர்களான வரலாற்று கறையை பெற்றவர்கள் ஆவீர்கள். அதுமட்டுமல்ல தமிழினம் தனது விடுதலையை வென்றெடுத்த பின்னர் இந்த பாசிச அரசின் கொடிய ஒடுக்குமுறைகள் உங்களையும், உங்கள் இனத்தையும் நோக்கி திருப்பப்படப் போவதை நீங்கள் இப்போதே உணர்ந்து செயல்படுமாறு கேட்டுக் கொள்கிறோம். எனவே இத் தரகு முதலாளிய அரசிற்கு எதிராக ஒடுக்கப்படும் சிங்கள மக்களின் விடுதலைக்காக உங்கள் போராட்டங்களை உடன் தொடருமாறு அறை கூவுகிறோம். இன்றைய பாசிச அரசின் ஒடுக்குமுறைக் கெதிராக சிங்கள மக்கள் நடத்தும் ஜனநாயக உரிமைகட்கான போராட்டத்திற்கு ஆதரவு நல்கும் அதே சமயம், சிங்கள முற்போக்கு சக்திகளுடன் பரஸ்பரம் புரிந்துணர்வின் அடிப்படையில் ஒன்றிணைந்து போராடவும் சகல வழிகளிலும் உதவவும் தயாராக உள்ளோம்.

இன்றைய தரகு முதலாளிய அரசை தூக்கி எறிய சிங்கள புரட்சிகர சக்திகள் ஒன்றுபட்டு ஸ்தாபன ரீதியில்



சிங்கள மக்கள் மத்தியில் உள்ள பரந்துபட்ட ஜனநாயக சக்திகளை ஐக்கியப் படுத்தி போராடவேண்டியது அவர்களின் உடனடித் தேவையாகும். இதன் மூலமே சிங்கள மக்களும் தமக்கான மக்கள் ஜனநாயக அரசை உருவாக்க முடியும்.

இந்த இடத்தில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபகரும் தலைவரும் அண்மையில் சிறிலங்கா பாசிச அரசினால் வெலிகடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட தியாகவீரருமான தோழர் தங்கதுரையின் நீதிமன்ற உரையில் சில வரிகளை அவருடைய விடுதலை நினைவுகளுக்குச் சிரந்தாழ்த்தி மேற்கோளாக்கிக் கொள்ள விரும்புகிறோம்.

"நாம் வன்முறைமீது காதல் கொண்டவர்களோ அல்லது அதுமாதிரியான மனநோயால் பீடிக்கப்பட்டவர்களோ அல்லர். மாறாக விடுதலையை முன்னெடுத்து போராடும் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் நேர்மையான போராளிகளே நாங்கள். சிங்கள மக்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்வேன். எமதுபூமியில் மட்டுமல்லாது உங்கள் நாட்டில் பல பாகங்களிலும் மிக அண்மைக்காலம் வரை தமிழ்மக்கள் மீது உங்கள் நாட்டின் அதிகார அமைப்பினால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கர வாதத்தை சரியென நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? அன்றியும் இவை மட்டுமல்லாது நம்மை நாமல்லாதவராக்கும் முயற்சியிலும் பல வழிகளிலும் ஈடுபட்டு வரும் உங்கள் அரசின் நாகரீகமற்ற நடவடிக்கைகளின் பாதிப்பில் இருந்து எம் மக்களை மீட்க நாம் முன்னின்றமையைத்தான் தவறு என்று கொள்வீர்களா?

அப்படியாயின், அப்படியான உயர்ந்த இலட்சியத்தை முன் வைத்துப் போராடிய எம்மீது பயங்கரவாத திரையைப் போர்த்தி உங்கள் நாட்டு சட்டங்களிலும், பயங்கரவாதத்தை புகுத்தி புதுப்பெருமை தேடிக்கொண்ட உங்கள் அமைப்பு விசாரணை என்றபெயரில் நடாத்தும் கண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துடைப்புகளையும் சரியென ஏற்றுக்கொள்கிறீர்களா? அல்லது பாதிக்கப்படுகிறவன் தமிழன்தானே என்ற பொறுப்பற்ற உணர்வா? அப்படியாயின் தற்போதைக்கு உங்கள் மீது எம்மால் அனுதாபம் கொள்ள மட்டுமே முடியும். நாம் விடுதலை பெறுவது நிதர்சனமான உண்மை. அதன் பின்னர் உங்கள் நாட்டின் சட்டப்புத்தகங்களில் நிரந்தரம் பெற்று விட்ட எச் சட்டங்களும் எம்மை அணுகா. அப்படியாயின் இச் சட்டங்களையும், பயங்கரவாதத்தையும் நீங்களே சுவீகாரம் எடுப்பீர்கள் என்ற கையறுநிலையை இப்போதே எய்தி விட்டீர்களா?

(ஆதாரம்—நாம் வன்முறைமீது காதல் கொண்ட மனநோயாளர்கள் அல்ல பக்-12)

## மலையக மக்களுக்கான தீர்வு :-

மலையக மக்களைப் பொறுத்தமட்டில் நாம் அவர்களை இரு பிரிவினராகப் பார்க்கலாம். செறிவான பகுதிகளில்(கற்றன், மஸ்கேலியா) வாழ்பவர்கள் ஒரு பகுதியினர். ஐதான பகுதிகளில் (கண்டி, நாவலப்பிட்டி) வாழ்பவர்கள் மறு பகுதியினர். இவர்கள் இரு பகுதியினருமே இன்று பேரினவாத ஒடுக்குமுறையின் கீழ் மோசமாக நசுக்கப்படுகிறார்கள். இதில் ஐதான பகுதியில் வாழ்பவர்கள் மிகவும் மோசமாக பாதிக்கப்படுகிறார்கள். இன்றிருக்கும் நிலையில் மலையக மக்கள் தேசிய சிறுபான்மையினர் என்ற நிலையிலே உள்ளார்கள். இவர்களது பிரச்சனைக்கு மூன்று தீர்வுகளே உண்டு.

1. குடி பெயர்ந்து வடக்கு கிழக்கு வருதல்
2. செறிவான பகுதிகளில், ஐதான பகுதிகளில் உள்ளோரும் சேர்ந்து குடியேறல்
3. இந்தியா செல்லல்



இம் மூன்று தீர்வுகட்காகவும் போராடும் உரிமை இவர்கட்கு உண்டு. எதையும் முடிவு செய்து கொள்ளவும் அதற்கு போராடும் உரிமையும் அவர்கட்கு உண்டு. மலையக மக்கள் தங்கள் தலைவிதியை தீர்மானிப்பதற்காக ஒன்றுபட்ட போராட்டம் ஒன்றை முன்னெடுக்க நாம் எம்மாலான சகல விதத்திலும் போராடுவோம். ஐதான பகுதிகளில் வசிப்பவர்கள் செறிவான பகுதிகட்குச் சென்று குடியேறுவதற்கு அல்லது வடகிழக்குக்கு வருவதற்கு உடனடி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் வேண்டும்.

செரிவான பகுதிகட்கு புலம் பெயர்த்து தம்மை ஸ்தாபிதம் செய்து கொள்வது எந்த அளவிற்கு சாத்தியப்பட்டுள்ளது என்பதுபற்றி இப்போது சரியாக சொல்ல முடியாவிடினும் மலையக மக்களின் உறுதியான ஒன்றிணைந்த போராட்டத்தில், அவர்கள் தமது தற்பாதுகாப்பை அப்பகுதிகளில் உறுதி செய்துகொள்ள முடியும் என்று நம்புகிறோம். செறிவான மலையக மக்களை அமைப்பு ரீதியில் அணிதிரட்டி, ஆயுதமேந்தி இருப்பிற்காக போராட வைப்பதே இன்றைய பணியாகும். வடக்கு கிழக்கில் குடியேற விரும்புவோர்கட்கு நாம் எப்போதும் உதவ தயாராக உள்ளோம்,

மலையக மக்களைப் பொறுத்தவரை தாம் தனியாக போராடும் அதே சமயம், சிங்கள ஒடுக்கப்படும் மக்களுடனும், புரட்சிகர சக்திகளுடனும் இணைப்பை ஏற்படுத்திக் கொள்வதும் அவசியமானதொன்று. அப்படி இணைப்பு ஏற்படும்வரை மலையக மக்கள் போராடாமல் இருக்க முடியாது. மலையக மக்களிற்கான தீர்வு அவர்கட்கான சுயாட்சி அமைப்பு அல்லது சுய நிர்வாக அமைப்பு ஆகவே இருக்க முடியும். இது தமிழீழ விடுதலையின் வெற்றியில் தங்கியுள்ளது. மலையக மக்களும் தமிழீழ தேசிய விடுதலைப் போராளிகளுடன் இணைந்து போராடுவது உடனடி தேவையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### முஸ்லிம் மக்களுக்கான தீர்வு :

முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தமது தனித்துவத்தை இழந்துவிடலாம் என அஞ்சத் தேவையில்லை. தமிழீழப் பகுதிகளில் வாழும் முஸ்லீம்கள் தமது கலாச்சார தனித்துவங்களைப் பேணக்கூடிய வகையில் அவர்கள் விருப்பத்திற்கேற்ப தனியான நிர்வாகப் பிரிவுகள் உருவாக்கப்படும். குறிப்பாக கல்முனை மாவட்டம் அவர்களது தனி மாவட்டமாக அங்கீகரிக்கப்படுவதுடன் சுய நிர்வாக அமைப்போ அல்லது சுயாட்சி அமைப்போ வழங்கப்படும் என உறுதி கூறுகிறோம். அத்துடன் வடக்கு, கிழக்கு வெளியே வாழும் முஸ்லிம் மக்கள் தமது ஜனநாயக உரிமைக்காக நடத்தும் போராட்டங்களுக்கும் பூரண ஆதரவு வழங்குவோம்,

இந்த அடிப்படையில் எமது போராட்டத்தினை முன்னெடுத்து தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையான தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதும் தமிழீழ மக்கள் குடியரசை அமைப்பதும் எமது பணியாகும்.



## எமது அடிப்படைக் கொள்கைகள்

1. பாராளுமன்ற மற்றும் சமாதான பூர்வ வழிகள் மூலம் தமிழீழத்தை பெறமுடியும் என்ற சந்தர்ப்பவாதப் பாதையையும் சமரசப் போக்கையும் நிராகரித்து புரட்சிகர மக்கள் யுத்தபாதையை முன்னெடுத்தல் என்பதும்

2. விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க எல்லா தமிழ் தேசியப் பிரிவினரையும் ஒன்றிணைத்துப் பாட்டாளிகள், மற்றும் ஒடுக்கபடுவோரது சுதந்திரத்தை உறுதி செய்யும் விதத்திலும் தமிழீழ மக்கள் குடியரசை ஒரு மக்கள் ஜனநாயக அரசாக உருவாக்க போராடுதலும் அதன் மூலம் நீண்டகாலத்தில் ஒரு சோசலிச சமூக அமைப்பை கட்டி எழுப்பலும்.

3. தீண்டாமை கொடுமைகளை ஒழிப்பதோடு மட்டுமன்றி சாதி அமைப்பையே ஒழிக்கும் விதத்தில் சமூக பொருளாதார ஏற்றதாழ்வுகளை அகற்றி சமத்துவத்தை ஏற்படுத்த போரிடலும் பாடுபடலும்

4. அன்னிய நாடுகளின் ஆதிக்கத்திலிருந்தும் சுரண்டலிலிருந்தும் தமிழீழத்தை விடுவித்து தேசத்தின் சுயாதிபத்தியம் மக்களின் சுதந்திரம் ஆகியவற்றை உறுதி செய்யும் விதத்தில் பிரதானமாக சொந்த காலில் தங்கியிருந்து போரிடல் என்பதும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5. எந்தவொரு தனி மனிதனிற்கும் விரும்பிய எந்த மதத்தையும் பின்பற்றவும், மதங்களைப் பின் பற்றாதிருக்கவும் சுதந்திரத்தை உறுதிசெய்தலும்

6. ஒடுக்கப்படும் சிங்கள மக்களுடன் ஒடுக்கப்படுபவர்கள் என்ற வகையில் நட்புறவை பேணலும் எமது போராட்டம் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரானதேயன்றி சிங்களமக்களுக்கு எதிரானதல்ல என்பதில் உறுதியாக இருத்தலும்.

7. அடிப்படை கொள்கை மற்றும் நடைமுறை பிரச்சனைகளில் விஞ்ஞான பூர்வமான சமூக கண்ணோட்டத்தை கொண்டிருத்தல் என்பதும்.

8. மற்றைய நாடுகளில் ஒடுக்கப்படும் விடுதலைக்காக போராடும் மக்களுடனும் இயக்கங்களுடனும் நட்புறவும் ஆதரவும் கொண்டிருத்தல் என்பதும் எமது அடிப்படை கொள்கையாகும்.



# பின்னுரை

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கின்ற நோக்கில் எமது கொள்கைகள் பற்றி சுருக்கமாகவும், தெளிவாகவும் முன்வைத்துள்ளோம். சில விடயங்களை விரிவாக்கியும் வேறுசிலவற்றை தேவை கருதி சுருக்கமாகவே குறிப்பிட்டிருக்கிறோம்.

இதில் ஏனைய தோழமை இயக்கங்கள் பற்றி நாம் முன்வைத்துள்ள கருத்துக்கள் நட்பு நோக்கிலான விமர்சனங்களே அன்றி அவற்றின் மீது சேறு பூசும் செயல்களோ அல்ல. தோழமை இயக்கங்கள் தமது இலட்சியத்தில் கொண்டிருக்கும் பற்றுறுதியும் அதை அடைவதற்காக அவை செயல்பட்டு வரும் தீவிரமும் வரவேற்க கூடியதே. ஆயினும் எமது கருத்து நிலையில் உள்ள நடைமுறை தந்திரோபாயங்களில் அவர்களுக்கும், எமக்குமுள்ள வேறுபாட்டை விளக்கும் நோக்கிலேயே அவற்றை விமர்சனம் செய்வது அவசியமாயிற்று. விடுதலைப் போராட்டத்திற்கான பயணத்தில் நாம் எல்லா இயக்கங்களும் பொதுவான உடன்பாட்டிற்கு வரவேண்டுமென மனப்பூர்வமாக விரும்புகிறோம். இப்பொது உடன்பாட்டின் மூலமே எதிரியை இலகுவில் வெற்றி கொள்ளவும் எமது விடுதலையை விரைவில் பெறவும் முடியும் என நாம் நம்புகிறோம். விடுதலைப் போராளிகளிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படினும் அவை நேச முரன்பாடுகளே பகை முரன்பாடுகள் அல்ல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதை உணர்ந்து செயற்படுமாறு சகலரையும் சகல போராளிகளையும் கேட்டுக் கொள்கிறோம்.

எமது கொள்கைகள் வேலைத் திட்டங்களில் நம்பிக்கை வைக்கிற விடுதலைப் போராட்டத்தில் பற்றுறுதியுள்ள அனைத்து தமிழ்மக்களையும் எம்மோடு அணிதிரளுமாறு அறைகூவி அழைக்கிறோம். எமது பாதை கடினமானது தான்; கஷ்டங்கள் நிறைந்ததுதான். கஷ்டங்களை துச்சமாக மதித்து தியாகங்கட்கு தயாராக சளைக்காது போராடுவோமாயின் எமது வெற்றி நிச்சயம். எனவே பிரகாசமான எதிர்காலத்தை காண தமிழீழ மக்கள் குடியரசை அமைக்க அனைத்து தமிழ் மக்களே அணிதிரளுங்கள்.

**சகல அடிமை விலங்குகளையும் உடைத்தெறிந்து உன்னதமான மனித சமூக அமைப்பை உருவாக்க தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்போம்.**



| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 15 | விசயமாகும் | பணியாகும் |
| 5 | 6 | சரிவுகள் | சரிகள் |
| 9 | 17 | Multe-Inter nationals | Multi-nationals |
| 14 | 11 | அம்பலாமாகி | அம்பலமாகி |
| 15 | 26 | போராணிகளின் | போராளிகளின் |
| 17 | 26 | மக்களுக்கு | மக்களுக்கும் |
| 20 | 24 | இராட்சியங்கள் | இராச்சியங்கள் |
| 21 | 23 | கோல்புலூக் | கோல்புறூக் |
| 21 | 17 | இனங்கனே | இனங்களை |
| 22 | 17 | நறிப்பாக | குறிப்பாக |
| 23 | 12 | முலகாரணமாக | மூலகாரணமாக |
| 25 | 26 | தமிழ் | தனிச் |
| 27 | 18 | யாழ்ப்பானம் | யாழ்ப்பாணம் |
| 28 | 3 | வளர்ந்தெடுக்கப் | வளர்த்தெடுக்கப் |
| 31 | 2 | திருகோணமலை | திருகோணமலை |
| 37 | 33 | வீழச்சியால் | வீழ்ச்சியால் |
| 38 | 1 | வனரத் | வளரத் |
| 50 | 13 | போக்கான | போக்காக |
| 53 | 4 | மையப் | மயப் |
| 55 | 30 | ஏற்படுதற்குப் பாதியாய | ஏற்படுத்துவதற்குப் பதில் பாதிப்பை |
| 59 | 59 | பராமரிப்பதற்கு போதுமானதாக | பராமரிப்பதற்கு மேல்போதுமானதாக |
| 68 | 1 | பிரச்சனைகளை | பிரச்சனைக்களை |
| 77 | 1 | பாரந்துபட்ட | பரந்துபட்ட |
| 77 | 13 | மனநேயால் | மனநோயால் |
| 78 | 17 | ஐசதான | ஐதான |
| 79 | 10 | செரிவான | செறிவான |
| 79 | 10 | பெயர்த்து | பெயர்ந்து |
| 81 | 8 | ஒன்றினைந்து | ஒன்றிணைத்து |
| 83 | 27 | முரன்பாடுகளே | முரண்பாடுகளே |
| 83 | 27 | முரன்பாடுகள் | முரண்பாடுகள் |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




- எமது பாரம்பரிய பிரதேசங்களை மீட்டெடுப்போம் !
- தமிழீழ மக்கள் குடியரசை அமைப்போம் !

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்